கவிச்சக்கரவர்த்தி சயங்கொண்டாரின்

கலிங்கத்துப் பரணி

மூலமும் உரையும்

உரை : **புலியூர்க் கேசிகன்**

சாரதா பதிப்பகம்

2. கடை திறப்பு

[கவிச்சக்கரவர்த்தியின் கற்பனைவளம் இனிக்கவிவிக்க ஊறிச்சுரந்து களிப்பூட்டுகின்ற பகுதி இது. படையெடுத்துச் சென்றவர்கள் நாடு திரும்புகிறார்கள். அவர்கள் வெற்றி மிடுக்கோடும் புகழோடும் வருகின்றார்கள். அவர்களுடைய செயலாண்மையை நாடு முழுவதுமே வியந்து போற்றுகின்றது. வழிநெடுக, மக்கள் வீரர்களுக்கு வரவேற்பளித்து வாழ்த்து கின்றனர்; புலவர்கள் போற்றிப் பாடுகின்றனர்.

இந்த ஆரவாரமான உற்சாகத்தில் கலந்து கொள்ளா மல், அவ்வீரர்களின் காதலியர் மட்டும் ஊடிச்சினந்து ஒதுங்கி நிற்கின்றனர். பிரிவென்னும் கொடிய வேதனைத் தீயிலே வெதும்பி வாடிய அவர்களின் உள்ளத்திலே, வரும் வீரமற வரை வரவேற்கும் தன்முனைப்பு ஏற்படவில்லை; அவர்கள் தங்களைப் பிரிந்து வாடி நலனழிய விட்டுச் சென்ற கொடுமை நினைவே நிரம்பி நிற்கின்றது. தங்கள் வீட்டுக் கதவுகளை அடைத்துத் தாளிட்டுக் கொள்ளுகின்றனர் அவர்கள்.

ஆர்வம் அலைமோதுகின்ற உள்ளத்தோடு, ஆனால் புறத்தே சினத்தை வெளிப்படுத்தியவாறு நடிக்கும் அந்தப் பெண்களின் செயல், பெண்மையின் இயல்பான போக்கு, கவிஞரை மிகவும் கவர்கின்றது.

அவர்களின் ஊடலைத் தீர்க்கும்படியாக, தாமே அவர்களிடம் வேண்டிக் கேட்டுக்கொள்வது போலக் கற்பித்து, அடைத்த கதவுகளைத் திறக்குமாறு வேண்டுகின்ற தாக அமைந்த சுவையான பகுதி இது.]

உறுப்புக்களின் அழகு.

சூதாடு கருவியின் அளவேயுடைய இளைய முலைக ளையும், உடுக்கையின் அளவேயுடைய நுண்ணிய இடையி னையும், காதை அளாவும் நீண்ட மதர்த்த விழிகளையும் கொண்டுள்ள, கடலில் தோன்றிய அமுதத்தைப் போல வாழ்வு அளிக்கக்கூடிய பெண்களே! கதவைத் திறவுங்கள்.

சூதளவு அளவெனும் இளமுலைத்,
துடியளவு அளவெனும் நுண்இடைக்
காதளவு அளவெனும் மதர்விழிக்
கடலமுது அனையவர்! திறமினோ! 21

சூது - சூதாடு கருவி. துடி- உடுக்கை. நுண் - நுண்ணிய. இடை - இடுப்பு; மதர் - செருக்கு. விழி - கண். அமுது - அமிழ்தம். அனையவர் - ஒத்தவர்.

இளமுலை அழகு

இளைய முலைகள் பக்கம் திரண்டு வளருந்தோறும், ஆசை எழாது பொறுத்துக் கொள்ளும் மெய்யறிவு படைத்த யோகியரையும், தங்கள் உறுதி குலைந்து உங்கள் இடுப்புத் துவள்வதனால் படும் துன்பத்தைப் போலத் துன்புறும்படி செய்கின்ற அழகிய பெண்களே! உயர்ந்த வாயிலில் உள்ளே தாளிட்ட கதவினைத் திறவுங்கள்.

புடைபட இளமுலை வளர்தொறும்
பொறை அறிவுடையரும் நிலை தளர்ந்து
இடை படுவது பட அருளுவீர்!
இடு கதவு உயர்கடை திறமினோ! 22

புடைபட - பக்கங்கள் திரள. பொறை - ஆசை எழாத மன அடக்கம்; இடை - இடுப்பு. இடைபடுதல் - துன்புறுதல்; துவள்தல். பட - பொருந்த. இடு - தாள் இட்ட. கடை - வாயில் கதவு.

நடை அழகு

குளிர்ந்த இனிய சொற்களைப் பேசும் பெண்களே! நெளிவுகளையுடைய கூந்தல் அசையவும், கால்களிலே அணிந்துள்ள கிண்கிணிகள் ஒலிக்கவும், தூங்கி எழுகின்ற மயில்களைப்போல நடந்துவந்து, வாயில் கதவுகளைத் திறவுங்கள்!

சுரிகுழல் அசைவுற அசைவுறத்,
துயில்எழும் மயில்என மயில்எனப்,
பரிபுரம் ஒலிஎழ, ஒலிஎழப்
பனி மொழியவர்! கடை திறமினோ! 23

கரி - கருண்ட. குழல் - கூந்தல். துயில் - தூக்கம். பரிபுரம் - கிண்கிணி. பனி - குளிர்ந்த; இனிய மொழி - சொல்.

ஊடிய மகளிர்

முதற் குலோத்துங்க சோழன் வேண்டியவர்க்கு வேண்டியவற்றைக் கொடுத்தலை உடையவன்; மனிதரிலே சிறந்தவன். அவன், இனிய கனவில் காதல் மனைவியராகிய உங்களிடம் வந்து சேர்ந்தான். அப்பொழுது நீங்கள் அவனைத் தழுவிக் கூடி மகிழவில்லை. மாறாக, நெஞ்சிலே பிணக்கம் கொண்டீர்கள். அப்படிப் பிணக்கம் கொண்ட உங்கள் நெஞ்சத்தோடு, விடிந்ததும், அதன் பிழைக்காக நீங்களே பிணக்கம் கொள்ளும் அவனுடைய காதற் கிழத்தியர்களே! உங்களுடைய அகன்ற வாயிலின் கதவுகளைத் திறவுங்கள்!

கூடிய இன்கனவு அதனிலே
கோடை நர துங்கனோடு அணைவுறாது,
ஊடிய நெஞ்சினோடு ஊடுவீர்?
உமது நெடுங்கடை திறமினோ! 24

கூடிய - வந்தடைந்த. நரதுங்கன் - மனிதரிலே சிறந்தவன்; குலோத்துங்கன். அணைவு உறாது - தழுவிப் புணராமல். ஊடிய - பிணங்கிய. நெடும் கடை - அகன்ற கதவு.

விடிமின்! பிடிமின்!

நீங்கள் ஊடல் கொண்டீர்கள். அப்பொழுது உங்களுடைய ஆடையைக் காதல் வேட்கையால் பற்றி இழுக்கவும், வெறுப்பில்லாத பொய்க் கோபமே உங்களிடம் உண்டாயிற்று. 'ஆடையை விட்டுவிடுங்கள்' விட்டுவிடுங்கள்! என்று அந்தப் பொய்க் கோபத்தோடு மழலைச் சொல்லால் குழறினீர்கள். அவ்வளவே தவிர, அந்த இடத்தைவிட்டுச் சிறிதும் அகலவே இல்லை. அவ்வாறு அகலாது நிற்பது, 'ஆடையைப் பிடியுங்கள்! ஆடையைப் பிடியுங்கள்' என்ற உட்பொருள் தோன்றும்படியாக இருந்தது. 'அப்படிப்பட்டவர்களே! அன்னம் போன்ற பெண்களே! கதவைத் திறவுங்கள்!'

'விடுமின் எங்கள் துகில் விடுமின்!' என்றுமுனி
வெகுளி மென்குதலை, 'துகிலினைப்

பிடிமின்!' என்ற பொருள் விளைய நின்று அருள்செய்
பெடை நலீர்! கடைகள் திறமினோ! 25

துகில் - ஆடை. முனி - வெகுளி; ஊடலால் உண்டான கோபம். மென் - இனிய. குதலை - மழலைச் சொல். விளைய - தோன்ற. நின்று - அந்த இடத்தைவிட்டு அகலாமல் நின்று. பெடை - பெண் அன்னம். நலீர் - நல்லீர்; பெண்கள்.

நனவில் நகக்குறி தடவுதல்

'சோழர்களில் சிறந்தவன் முதற் குலோத்துங்கன். அவனுடைய அருள் முழுவதும் இனி என்னுடையதாகும் என்று, இரவில் காணும் கனவிலே களிப்படைந்து, முலைகளில் கைநகங்களால் நகக்குறிகள் உண்டானதென மயங்கி, அவற்றை நனவிலேயும் தடவித் தேடிப்பார்க்கும் பெண்களே! அவன் வருகிறான்; வாயிற் கதவுகளைத் திறவுங்கள்!

'எனது, அடங்க இனி வளவ துங்கன் அருள்'
என மகிழ்ந்து, இரவு கனவிடைத்
தன தடங்கள் மிசை நகம் கடந்த குறி
தடவுவீர்! கடைகள் திறமினோ! 26

அடங்க - முழுமையும். வளவ துங்கன் - சோழரில் சிறந்த குலோத்துங்கன். தன தடம் - முலைத்தடம். மிசை - மேலே. இது சோழனின் காதலியர்பாற் பாடியது.

பிணக்கம் நீங்கிச் சேர்தல்

கணவர் மீது பிணக்குக் கொண்டு வெறுப்பவர்களில் உங்களுக்கு ஒப்பானவராக வேறு எவரும் இலர். அப் பிணக்கு நீங்கிப் புன்சிரிப்பு எழுந்ததும், 'முல்லை அரும்பு போன்ற பற்களின் சிரிப்பைப் பெற்றுவிட்டோம்' என்று, மகளிரின் கனிந்த பவளம் போன்ற வாயிதழினை நெருங்கி முத்தமிட்டுக் காதலர் அணைத்துக்கொள்ள வருவர். அப்பொழுது, இன்பமிகுதியால் முத்துப்போன்ற நீர்த்துளிகளைச் சிந்தும், கெண்டை மீனைப்போன்ற இரண்டு கண்களையுடைய

பெண்களே! கதவைத்திறவுங்கள்! திறவுங்கள். இது ஆனந்தக் கண்ணீர்.

முனிபவர் ஒத்திலராய், முறுவல் கிளைத்தலுமே,
முகிழ்நகை பெற்றம்!' என மகிழ்நர் மணித்
துவர்வாய்
கனி பவளத்து அருகே வருதலும், முத்து உதிரும்
கயல்கள், இரண்டுடையீர்! கடை திறமின்
திறமின்! 27

முனிபவர் - வெறுப்பவர். முறுவல் - புன்னகை. கிளைத்தல் - பூத்தல். முகிழ் - அரும்பு. நகை - சிரிப்பு. பெற்றம் - அடைந்தோம். மகிழ்நர் - கணவர். மணி - அழகிய. துவர் - பவளம். முத்து - முத்துப்போன்ற மகிழ்ச்சிக் கண்ணீர். உதிரும் - சொரியும். கயல் - கெண்டைமீன். கடை - வாயில். திறமின் - திறந்துவிடுங்கள்.

மகளிரின் பொய்த் தூக்கம்

இளமையுடைய காதலர்பால் ஊடல் கொண்டு, பொய்யாகக் கண்களை மூடி உண்மையாகவே தூங்குபவர் போலப் படுத்திருப்பீர்கள் 'அந்தத் தூக்கம் உண்மையான தூக்கம்தான்' என்று நினைத்த காதலர், தாம் செய்யும் தொழில் மகளிரின் ஊடல் நோய்க்கு மருந்தளிக்கும் என்று மனத்தில் எண்ணித் தங்கள் கையை உங்கள் அடி வயிற்றின்மேல் வைத்து மெல்லத் தடவுவர். அப்பொழுதும் நீங்கள் மிகுதியாய்ப் பொய்த்தூக்கம் தூங்கிக் கடைக்கண்களையும் திறவாதிருப்பீர்கள். அத்தகைய பெண்களே! வாயிலைத் திறந்து விடுங்கள்.

இத்துயில் மெய்த் துயிலே' என்று குறித்து, இளைஞோர்
'இது புலவிக்கு மருந்து' என மனம் வைத்து,அடியில்
கைத்தலம் வைத்தலுமே, பொய்த்துயில் கூர் நயனக்
கடை திறவா மடவீர்! கடை திறமின் திறமின்! 28

துயில் - தூக்கம். மெய் - உண்மை. குறித்து - நினைத்து. புலவி - ஊடல்; பிணக்கு. மனம் வைத்து - மனத்தில் எண்ணி. அடியில் - அல்குலில்; அரசிலையில், கூர்-மிகுதி. நயனம் - கண்,

'அடியில் கை வைத்தல்' புறத்தொழில் வகைகளுள் ஒன்று என்பர் காமநூலார். மீண்டும் பொய்யாகத் தூங்கியது, காதலரின் வேட்கைக்கு இசைந்ததால்.

கனவில் பெற முயல்தல்

முதற் குலோத்துங்க சோழன் பகை அரசர்களின் வலிமையை அழித்தான். அவ்வரசர்கள் அவனை வணங்கும் படியாகப் பகற்பொழுதில் வீதியில் உலாவந்தான். நீங்கள் அச்சம், நாணம், அடக்கம் ஆகியவற்றை விடுத்து, அவன் பவனி வருவதையே பார்த்தீர்கள். பிறகு இரவும் வந்தது. அப்பொழுது விருப்பத்தோடு காணும் கனவிற், பகலிலே இழந்த குணங்களைப் பெற நினைத்தீர்கள். அங்கும் அவன் வரவே, அதுவும் முடியவில்லை. அதனால், சொற்கள் தடுமாறிப் பேசினீர்கள். அத்தன்மையுடைய பெண்களே! நீங்கள் உங்கள் வாயிலைத் திறந்துவிடுங்கள்.

இகல் இழந்து அரசர் தொழ வரும் பவனி
இரவு உகந்து அருளும் கனவினில்
பகல் இழந்த நிறை பெறமுயன்று, மொழி
பதறுவீர்! கடை திறமினோ! 29

இகல் - வலி, பகை. தொழ - வணங்கும்படி. பவனி - உலா. உகந்து - விரும்பி. நிறை - அடக்கம். மொழி பதறுவீர் - வாய் குழறுவீர்.

முத்துமாலையும் பவளமாலையும்

பெண்களே! நீங்கள் வாயிலைத் திறப்பீர்களேயானால், உங்கள் கணவர் உங்களைக் கட்டித் தழுவுவார்கள். தாமரை மொட்டுப் போன்ற உங்கள் தனங்களின்மேல் இப்பொழுது முத்துமாலை சேர்ந்துள்ளது. இனிக் கணவர் உங்கள் தனங்களில் தங்களுடைய அழகிய சிவந்த உதடுகளாற் பவள மாலையையும் தவழ வைப்பார்கள். ஆதலால், இனியும் வாயிலை அடைத்திராமல் திறந்துவிடுங்கள்! [முன் பெற்ற கூடலின்ப நினைவை எழுப்பி ஊடல்தீர்க்க முயல்வது இது. பவளமாலை என்பது கலவிக்காலத்திலே செய்யும் பற்குறி வகைகளுள் ஒன்று.]

முத்து வடஞ்சேர் முகிழ் முலைமேல்
முயங்கும் கொழுநர் மணிச் செவ்வாய்
வைத்த பவள வடம் புனைவீர்!
மணிப்பொன் கபாடம் திறமினோ! 30

வடம் - மாலை. முகிழ் - கோங்கின் அரும்பு; தாமரை மொட்டு. முயங்கும் - புணரும். கொழுநர் - கணவர். மணி - அழகு. புனைவீர் - அணிவீர். கபாடம் - கதவு. பவளம் - பவளமாலை என்னும் பற்குறி.

ஆத்தி மாலையின்மீது ஆசை

முதற் குலோத்துங்க சோழன் இரப்பவர்களுக்குக் கொடுக்கும் குணமுடையவன். அவன் மார்பிலே ஆத்தி மாலை சூடியுள்ளான். அம் மாலைமீது உங்களின் பார்வை விழுகின்றது. அம் மாலையின் அழகிலே ஈடுபட்டு, அவன் சென்ற வழியிலேயே கண்களைச் செலுத்தி, 'திரும்பவும் எப்பொழுது வருவான்' என்று தேடுவீர்கள். 'அத்தகைய பெண்களே! உங்கள் அழகிய பொன்னாலாகிய கதவைத் திறந்துவிடுங்கள்!' என்கிறார்.

தண் கொடை மானதன் மார்பு தோய்
தாதகி மாலையின் மேல் விழும்
கண் கொடு போம் வழி தேடுவீர்
கனக நெடுங் கடை திறமினோ! 31

தண் - குளிர்ச்சி. மானதன் - மானத்தைக் காப்பவன்; குலோத்துங்கன். தோய் - பொருந்திய. தாதகி - ஆத்தி. கனகம் - பொன். நெடும் கடை - உயர்வாகிய கதவு. இது சோழனின் காதலியர்பாற் பாடியது.

படைக்கும் கண்களுக்கும் ஒப்புமை

முதற் குலோத்துங்கன் படை

பகைவர்மீது படையெடுத்துச் செல்வதற்கு அடையாளமாகப் படையினர் வஞ்சி என்னும் பூமாலையைச் சூட்டிக் கொள்வர். வஞ்சி சூடிய முதற் குலோத்துங்க சோழன் மீன்கொடியை உடைய பாண்டியன் பயந்து ஓடும்படி படையெடுத்துச் சென்றான். மதுரைமா நகருக்குள் புகுந்து

போர் புரிந்தான். பாண்டியனின் படைவகுப்பு இறுதிச் சேற்றிலே ஓடிப்போய் விழும்படி நெருக்கினான். பாண்டியர் படையை வெட்டுதலால் வஞ்சி சூடிய முதற் குலோத்துங்கன் ஏவிய படைபோல -

மகளிர் கண்கள்

மெல்லியலாரான உங்கள் கடைக்கண்கள், உங்கள் கணவர்களுடன், அவர்கள் கூடும் காலத்தில், கெண்டை மீன்கள் பயந்து தோற்று ஓடுவதுபோல, ஒன்றோடு ஒன்று பிறழ்ந்து போரிட்டு வெல்லும். அழகிய காதணிகளில் அவை மோதி விழும்படி ஒளி வீசுவதால், வஞ்சிப் பூமாலையை அணிந்த முதற் குலோத்துங்கன் ஏவிய வேற்படையைப் போன்ற கொடிய கண்களையும், இளம் பருவத்தையும் உடைய அழகிய பெண்களே! தாளிட்ட அழகிய கதவைத் திறவுங்கள் [பாண்டியர் கொடியிலுள்ள மீனை, மகளிர்களின் கண்மீன் வென்றது என்றதன் உவமை நயம் காண்க.]

அஞ்சிலே கயல் கெடக் கூடலிற் பொருது சென்று
அணி கடைக் குழையிலே விழ அடர்த்து எறிதலால்
வஞ்சி மானதன் விடும் படையினிற் கொடிய கண்
மடநலீர்! இடுமணிக் கடை திறந்திடு மினோ! 32

கயல் - மீன்கொடி; கெண்டை மீன். கூடல் - மதுரை; புணர்தல். பொருது - போர் செய்து; மோதி. அணி - படை வகுப்பு; அழகு. கடை - இறுதி; கடைக்கண். குழை - சேறு; காதணி. விழ - பாண்டியர் விழ; கண் விழ. எறிதலால் - வெட்டுதலால்; ஒளி வீசுதலால். படை - சேனை; வேல். அவன் படை எழுச்சியால் பாண்டியர் மீன்கொடி கலங்குவதும், கூடலால் பெண்கள் கண் சிவப்பதும் கூறுவது இது. இடுமணிக் கடை - கடாமணிக்கடை எனவும் பாடம்.

தோன்றும் நிகழ்ச்சி

பெண்களே! புணர்ச்சிக் காலத்திலே பரவசம் அடைவீர்கள்! உங்கள் உள்ளம் இளகியாய், தூக்கம் பறந்து ஓடிவிடும்! பவளம் போன்ற உதடுகளிலே காணப்படும் அழகிய சிவப்பு நிறமும் வெண்மையாகி விடும் வெண்மை

யான கடைக் கண்கள் சிவப்பு நிறம் அடையும்! அடக்கமாகிய இதழ்க் காவல் நீங்கப் புன்னகை உண்டாகும்! அவற்றைக் கண்டு களிப்படையும் உங்கள் கணவரை நன்றாகப் புணருவீர்கள்! அத்தகையவர்களே, வாயிலைத் திறந்துவிடுங்கள்!

அவசமுற்று உளம்நெகத் துயில்நெகப், பவள வாய்
அணிசிவப்பு அற, விழிக்கடை சிவப்புஉற, நிறைக்
கவசம் அற்று இளநகை களிவரக், களிவரும்
கணவரைப் புணருவீர்! கடைதிறந் திடுமினோ! 33

அவசம் - பரவசம். உளம் நெக - மனம் உருக. துயில் - தூக்கம். நெக - அழிய. அற - போக. உற - அடைய. நிறை - அடக்கம். கவசம் - காவல். அற்று - அழிந்து. இளநகை - புன்சிரிப்பு.

நிலவை உடுப்பீர்

கலவியாகிய இன்பக் களியாட்டத்திற் களித்தவால் மன மயக்க முறுவீர்கள். உங்களுடைய இடையில் இருந்த ஆடையும் நெகிழ்ந்து போகும். இன்பமயக்கத்தில் இருக்கும் நீங்கள் நிலவின் கலைக்கும் வெண்ணிறமாகிய உங்கள் மெல்லிய ஆடைக்கும் வேறுபாடு அறியாமல் மயங்கி, மதியின் கலையை ஆடையென நினைத்து எடுத்து உடுக்க முயலுவீர்கள். அத்தன்மையுடைய பெண்களே! அழகிய வேலைப்பாடு அமைந்த பெரிய கதவினைத் திறவுங்கள்!

கலவிக் களியின் மயக்கத்தால்
கலைபோய் அகலக், கலை மதியின்
நிலவைத் துகில் என்று எடுத்து உடுப்பீர்! 34
நீள்பொன் கபாடம் திறமினோ!

கலவி - புணர்ச்சி. களி - இன்பந்தரும் ஆட்டம் (கதகளி என்பது போல). கலை - கதிர்; ஆடை மதி - நிலவு. நிலவு - ஒளி. துகில் - ஆடை நீள் - நீண்ட பொன் - அழகு

நனவும் கனவும்

முதற் குலோத்துங்க சோழன் போருக்குச் சென்றிருந்த போது, தனித்திருந்த நீவிர், அவன் நினைவாகவே

படுத்துறங்குவீர். கனவில் அவனைக் கட்டித் தழுவி இன்பம் எய்தும் சமயத்தில் கண்விழித்துப் பார்க்கவே ஏமாற்றம் அடைவீர். பிறகு, விழித்திருக்கும் காலத்தில், முதற் குலோத்துங்க சோழனே நேரில் வருவான். அவனோடு கலந்து இன்பம் எய்துவீர். விழிப்பில் நடந்த நிகழ்ச்சி அது என்று தெளிவடையாமல், அதனையும் முன்போல் கனவில் நிகழ்ந்த நிகழ்ச்சியாகவே எண்ணித் தோழியரிடம் சொல்லி நிற்பீர். கேட்ட தோழியர் விழுந்து விழுந்து சிரிப்பார்கள். அதனை அறிந்த பிறகே தெளிவடைவீர். அத்தகைய தெளிவில்லாத பெண்களே! கதவைத் திறந்து அவனை உள்ளே விடுங்கள்!

நனவினில் சயதரன் புணரவே பெறினும், நீர்
நனவு எனத் தெளிவுறாது, அதனையும் பழைய அக்
கனவு எனக் கூறுவீர், தோழிமார் நகைமுகம்
கண்டபின் தேறுவீர்! கடை திறந்திடுமினோ! 35

நனவு - விழித்திருக்கும் காலம். சயதரன் - வெற்றியைத் தரித்தவன்; குலோத்துங்கன். நகை - கேலிச் சிரிப்பு. தேறுவீர் - தெளிவு அடைவீர்கள்.

பொய்த்துயில் கொள்வீர்

உங்களைக் கூடுங்காலத்தில், 'பெண் கொடியே! உன்னை ஒருபொழுதும் பிரியமாட்டேன்; பிரியின், சிறு பொழுதும் தரித்திருக்கமாட்டேன்' என்று கூறும் கணவரின் சொற்கள் பிழைபட, ஒருபக்கத்தில் உண்மையாகவே அது உங்களை வருத்தும். மற்றொரு பக்கத்தில், கணவர்மேல் கொண்ட ஆசை உள்ளிருந்தே வருத்தும். இத் துன்ப நிலையினால், உறங்காமல், விடியும் வரையிலும் பொய்யாகவே கண்களைமூடிப் படுத்திருக்கும் இளம் பருவமுடைய அழகிய பெண்களே! அலங்கரிக்கப்பட்ட உங்கள் அழகிய கதவினைத் திறவுங்கள்!

மெய்யே கொழுநர் பிழை நலிய,
வேட்கை நலிய, விடியளவும்
பொய்யே உறங்கும் மட நல்லீர்
புனைபொற் கபாடம் திறமினோ! 36

மெய் - உண்மை கொழுநர் - கணவர். நலிய - வருந்த. வேட்கை - கலவி விருப்பம். மடம் - இளமை. புனை - ஒப்பனை; அலங்காரம். பொய்யே உறங்கும் - பொய்த்துயில் கொள்ளும்.

மார்பில் தூங்குவீர்

நீவிர் படுக்கையில் கணவரைச் சேர்வீர்; கலவி இன்பக் களிப்பிலே திளைப்பீர். அம் மயக்கத்தில் பொழுது விடிந்ததை யும் அறியமாட்டீர். கணவரின் மார்பையே படுக்கையாகக் கொண்டு அயர்ந்து தூங்குவீர். அத்தகைய பெண்களே! அழகிய பொன் கதவுகளைத் திறந்து விடுங்கள்!

போக அமளிக் களிமயக்கில்
புலர்ந்தது அறியாதே, கொழுநர்
ஆக அமளி மிசைத் துயில்வீர்
அம்பொற் கபாடம் திறமினோ! 37

போகம் - புணர்ச்சி இன்பம். அமளி - படுக்கை. களி - கள்ளுண்டு மகிழ்ந்தது போன்ற மயக்கம். புலர்ந்தது - விடிந்தது. கொழுநர் - கணவர். ஆகம் - மார்பு. கபாடம் - கதவு.

வருகை காணாது வருந்துவீர்

உங்களைத் தங்கள் அன்பால் ஆட்கொண்ட கணவ ரின் வருகையை எதிர்பார்த்திருப்பீர். அவர்கள் குறித்துச் சென்ற பருவம் வந்ததேயன்றி, அவர்கள் வரவில்லை 'வருவார் வருவார்?' எனத் தெருவாசலில் வந்து கதவைத் திறந்து பார்ப்பதும், வாராரெனக் கதவைத் தாளிட்டு உள்ளே போவதுமாக இருந்தமையால், உங்களுடைய மெல்லிய பாதங்கள் சிவக்கும்; நடையும் தளரும்! குறித்த காலத்தில் கணவர் வராமையால் மனச்சோர்வும் வெறுப்பும் அடைவீர்கள். உடலும் உள்ளமும் தளர்ச்சியும் வெறுப்பும் அடையப் பெறுவீர்கள். அத்தகைய பெண்களே! கதவைத் திறவுங்கள்.

ஆளும் கொழுநர் வரவு பார்த்து,
அவர்தம் வரவு காணாமல்,

தாளும் மனமும் புறம்பாகச்
சாத்தும் கபாடம் திறமினோ! 38

ஆளும் - அன்பினால் ஆட்கொள்ளும். கொழுநர் - கணவர். வரவு - வருகை. தாள் - பாதம். புறம்பு - வேறு. சாத்தும் - மூடும்.

ஒன்றிலே இரண்டு

கொப்பூழாகிய நீர்ச்சுழியிலிருந்து மேல்நோக்கி எழுந்த மயிர்க்காலான ஒழுங்குடைய பசுமையான ஒரு தண்டிலே, மாலைக் காலத்தில் காணப்படும் தாமரை மொட்டுப் போன்ற திரண்டு குவிந்த இரண்டு முலைகளைச் சுமந்து கொண்டு வரும் பெண்களே! அழகிய பொன்னா லாகிய கதவினைத் திறவுங்கள்!

உந்திச் சுழியின் முளைத்து எழுந்த
உரோமப் பசுந்தாள் ஒன்றில் இரண்டு
அந்திக் கமலம் கொடுவருவீர்
அம்பொன் கபாடம் திறமினோ! 39

உந்தி - கொப்பூழ். உரோமம் - மயிர். தாள் - தண்டு. அந்தி - மாலைக்காலம். கமலம் - தாமரை. அந்திக் கமலம் - மாலையிலே காணப்படும் தாமரை முகை.

சிறைபுகுந்த மகளிர் நிலை

மீன் உருவம் தீட்டப்பெற்ற கொடியை உடையவர் பாண்டியர். குலோத்துங்கனின் படைக்கு முன்நிற்க ஆற்றாத அவர்கள், கண்களில் நீர் பெருகும்படியாகத் தங்கள் நாட்டைவிட்டுக் காட்டிற்குள் புகுந்தனர். அவர்களின் உரிமை மகளிரான நும்மை, முதற் குலோத்துங்க சோழன் கொணர்ந்து, தனி மாளிகையிலே சிறை வைத்தான். இவ்வாறு தனி மாளிகையில் தங்கியுள்ள இளம்பெண்களே! உங்கள் வாயிலைத் திறவுங்கள்! [இவர் பாண்டியரிடமிருந்து கொணரப் பெற்ற உரிமை மகளிர் ஆவர்.]

மீனம் புகு கொடி மீனவர்
விழி அம்புக ஒடுக்

காளம் புக வேளம் புகு
மடவீர்! கடை திறமின்! 40

மீனம் - மீன். மீனவர் - பாண்டியர். அம்பு - அப்பு; நீர். உக - சொரிய. வேளம் - தனி மாளிகை.

கப்பப் பொருளாக வந்தீர்

அலைகள் எறிகின்ற காவிரிநீர் பாய்வதால் நீர்வளம் பொருந்திய சோழநாட்டைப் பிறருக்கு உரிமையின்றித் தனக்கே உரிமையாகப் பெற்றவன் முதற் குலோத்துங்க சோழன். 'ஏவல் இளம்பெண்களைத் திறைப் பொருளாகச் செலுத்துதல்' என்ற பண்டை வழக்கத்தின் முறைப்படி செலுத்தப்பட்ட பகுதிப் பொருளாகிய சேர நாட்டு மகளிரே! துளுவ நாட்டுப் பெண்களே! உங்கள் வீடுகளின் கதவுகளைத் திறவுங்கள்!

அலைநாடிய புனல் நாடுடை
அபயர்க்கு இடு திறையாம்
மலை நாடியர்! துளு நாடியர்!
மனையிற் கடை திறமின்! 41

நாடிய - வீசிய. புனல் நாடு - சோழ நாடு. திறை - கப்பம். மலைநாடு - சேரநாடு. துளு நாடு - துளுவ நாடு. மனை - வீடு. மலை நாடும் துளுநாடும் சோழர்க்கு அடங்கிய சிற்றரசுகள் என்பது இது.

மயில்கள் போல வருவீர்!

இளம் பருவமுடைய அழகிய உங்கள் முலைகளின் மேல் விலைமதிக்க முடியாத பொன், முத்து, பவளம், இரத்தினம் முதலிய மாலைகள் அசைந்தாடும்; உங்கள் கண்கள் தாவிக் காதணிகளிற் சென்று தாக்கும்; நீங்கள் கணவருடைய தோளாகிய மலையைத் தழுவி, விருப்பத்தோடு அம் மலையிலே விளையாடிவரும் மயில்களைப் போல் வருவீர்கள்?' அத்தகையவர்களே! வாயிலைத் திறந்து விடுங்கள்!

விலை இலாத வடம் முலையில் ஆட,விழி
குழையில்ஆட, விழை கணவர் தோள்

மலையில் ஆடி வரும் மயில்கள் போல வரும்
மடநலீர்! கடைகள் திறமினோ! 42

வடம் - மாலை. குழை - காதணி. விழை - விரும்பும். ஆடி - தழுவிக் கலவியாடி.

கன்னடப் பெண்டிரே!

காதுகளுக்கு இனிமை உண்டாகும்படியாக, அழகிய மழலைச் சொற்களால் சில வடுகுச் சொற்களையும், சில தமிழ்ச் சொற்களையும் கலந்து தடுமாறிப் பேசும் கன்னட நாட்டு பெண்களே! உங்கள் வாசலை நெருங்கி அடைத்திருக்கின்ற கதவைத் திறவுங்கள்!

மழலைத் திரு மொழியில் சில
வடுகும் சில தமிழும்
குழறித் தரு கருநாடியர்!
குறுகிக் கடை திறமின்! 43

மழலை - குதலைப் பேச்சு. திரு - அழகிய. வடுகு - வடுகரின் மொழி; கன்னடம். குழறி - தடுமாறி. குறுகி - அணுகி. [இதனால் வடுகு நாட்டவரும் குலோத்துங்கனுக்குத் திறை செலுத்தியமை விளங்கும்.]

கை நழுவ மயங்குவீர்!

களவுப் புணர்ச்சியின்போது, கணவர் 'உம்மைப் பிரியேம்' என்று வஞ்சினம் மொழிந்தனர். பிறகு அவர், அதைப் பொய்யாக்கிவிட்டு போர்மேற் சென்றனர். அப்பொழுது, அவர் ஒரு காலத்தைக் குறித்து அதற்குள் வந்து விடுவதாகவும் கூறினர். ஆனால், வரவில்லை. காலங் கடந்து திரும்பி வந்த கணவர் தம் மார்போடு கட்டித் தழுவி உங்களை அணைத்தனர். அப்பொழுது, கணவரின் குற்றம் மனத்தை வருத்தியதால், 'எம்மை அணைக்க வேண்டாம்' என்று பிணங்கி, அவர் தம் கைப்பிடியினின்றும் நீங்குவீர். அவ்வாறு நீங்கிக் கணவருடைய கைகளின் அணைப்பிலிருந்து நழுவியதும், அப்போதே அந்தப் பிரிவைப் பொறுக்க மாட்டாதவராகி மயக்கம் அடையும் பெண்களே! அழகிய பொற்கதவினைத் திறந்து விடுங்கள்!

தழுவும் கொழுநர் பிழைநலியத்
'தழுவேல்' என்னத் தழுவிய கை
வழுவ, உடனே மயங்கிடுவீர்!
மணிப்பொன் கபாடம் திறமினோ! 44

தழுவும் - அணைக்கும். கொழுநர் - கணவர். நலிய - வருந்த. வழுவ - நழுவ. 'மயங்கிடுவீர்' - மனம் குழைவீர் என்பதும் பாடம்.

நகை செய்வீர்

பிரிந்து சென்ற கணவர் உங்களைக் கருதி மிகவும் விரைவாக வருவர். அதனால் அவர்கள் விழிகள் சிவக்கும். இவ்வாறு உங்களிடத்து விரைந்து வருவதைப் பார்த்துப் பரிகசிப்பதுபோல, நீங்கள் புன்சிரிப்புக் காட்டுவீர். அப் புன்னகை, ஆடவருடைய வருத்தத்தைப் போக்கி மகிழ்ச்சியை உண்டாக்கும். அத்தகைய பெண்களே! ஒப்பனை செய்யப் பட்ட உங்களுடைய அழகிய கதவினைத் திறந்து விடுங்கள்!

வேகம் விளைய வரும் கொழுநர்
விழிகள் சிவந்த படிநோக்கிப்
போகம் விளைய நகை செய்வீர்!
புனைபொன் கபாடம் திறமினோ! 45

வேகம் - விரைவு. கொழுநர் - கணவர். படி - தன்மை. போகம் - இன்பம். புனை - அலங்கரிக்கப்பட்ட. 'விழிகள்' மேனி எனவும் பாடம்.

உறக்கத்திலும் முக மலர்வீர்!

நீங்கள் படுத்துத் தூங்குவீர்கள். ஒரு கையின் கீழே காற்றால் அசையும் மெல்லிய ஆடையானது துவளும். மற்றொரு கையின் மேலே பூங்கொத்துக்களை முடிக்கும் கூந்தல் அசையும். இவ்வாறு, தூங்கும் சமயத்திலும் உங்களுடைய முகம் பொலிவோடு தோன்றும், அங்ஙனமாயின், நீங்கள் விழித்திருக்கும் காலத்தில் உங்களுடைய முகப் பொலிவைச் சொல்லவும் வேண்டுமோ! அவ்வளவு அழகுடைய பெண்களே! உங்கள் கதவைத் திறவுங்கள்!

சொருகு கொந்தளகம் ஒருகை மேல்அலைய,
ஒருகை கீழ் அலைசெய் துகிலொடே,
திரு அனந்தலிலும் முகம் மலர்ந்து வரு
தெரிவைமீர். கடைகள் திறமினோ! 46

கொத்து - பூங்கொத்து. அளகம் - கூந்தல். அலைசெய்- அசையும். துகில் - ஆடை. அனந்தல் - தூக்கம்; திருமாலின் திருவனந்தல் போல அறிதுயிலுமாம். திரு - அழகு. தெரிவை - பெண்.

நெஞ்சம் களிப்பீர்!

கலவி இன்பம் கொள்ளும் கணவர், உங்களின் முலைகளைக் குழையப் பிடிக்கும் சமயத்தில், அவர்களின் கைநகக்குறி பதிந்துவிடும். எவரும் வாராத ஒரு தனி இடத்தில் இருந்து கச்சினை அவிழ்த்துவிட்டு, முலைகளில் ஏற்பட்ட அந்நகக் குறிகளைப் பார்த்துப் பார்த்து மனத்தில் மகிழ்ச்சி கொள்வீர்கள். முன்பு ஏதும் பொருள் இல்லாத ஏழைக்குச் செல்வக் குவியல் கிடைத்தால், அந்தச் செல்வத்தைப் பிறர் கண்ணில் படாதபடி மறைத்து வைத்திருந்து, மெல்ல மெல்லத் திறந்து பார்த்து பார்த்து மூடுவதைப் போன்று இருக்கும் உங்களின் செயல்! இந்நிலையினை உடைய பெண்களே! உங்களின் கதவினைத் திறவுங்கள்!

முலைமீது கொழுநர் கைந்நகம்மேவு குறியை,
முன்செல்வம் இல்லாத அவர்பெற்ற நிதிபோல்
கலை நீவி யாரேனும் இல்லாத இடத்தே
கண்ணுற்று, நெஞ்சம் களிப்பீர்கள்! திறமின்! 47

மேவி - பொருந்திய. குறி - அடையாளம். அவர்; தந்த ஏழையர். கலை நீவி - கச்சை விலக்கி. யாரேனும் - எவரும். கண்ணுற்று - பார்த்து. நெஞ்சம் - மனம்.

மதர்விழி மாதர்

மன்மதன் மகளிரை மேலோராகக் கருதி அவர்களை வணங்குகின்றான். அந்த மன்மதனின் மலர்க்கணை போன்று மகளிரின் கண்கள் உள்ளன. அக்கண்கள் பாற்கடலில் தோன்றிய நஞ்சு போலவும் அமுதம் போலவும் இருப்பதாகக்

கணவர் கருதுகின்றனர். ஒரு பார்வை நோய் செய்கின்றது; மற்றொன்று மருந்தாக இருக்கின்றது! மன்மதனின் மலர்க்கணை ஆடவரின் உயிரையும் உணர்வையும் அழித்தல் போல, அப்பெண்களின் கண்கள் கணவரின் உயிரையும் உணர்வையும் ஊடுருவிச் செல்வனவாயிருந்தன. அத்தகைய கண்களை உடையவர்களே! உங்களின் கதவைத் திறவுங்கள்!

கடலில் விடமென அமுதென மதனவேள்
கருதி வழிபடு படையொடு கருதுவோர்
உடலின் உயிரையும் உணர்வையும் நடுவுபோய்
உருவும் மதர்விழி உடையவர்! திறமினோ! 43

விடம் - நஞ்சு. மதனவேள் - மன்மதன். படை - மலர்க்கணை. கருதுவார் - நினைப்பவர்; கணவர். நடுவு - நடுவில். உருவும் - ஊடுருவிச் செல்லும். மதர்விழி - செருக்குடைய கண்கள்.

இள நிலவும்! முழுநிலவும்

'உங்களின் முகமாகிய தாமரைமலரில் தோன்றும் புன்சிரிப்பின் தன்மை, பிறைச்சந்திரனின் ஒளியைப் போலவும், முலைகளாகிய தாமரை மொட்டின்மேல் அணிந்த முத்து மாலையின் ஒளி, அதனினும் சிறந்த முழுநிலவின் ஒளியைப் போலவும் காணப்படுகின்றன' என்று சொல்லும்படியாக, ஒயிலாக நடந்துவரும் அழகிய பெண்களே! கதவுகளைத் திறவுங்கள்!

முறுவல் மாலையொடு தாரமாலை, முக
மலரின் மீதும் முலை முகிழினும்,
சிறு நிலவும் அதன் மிகு நிலாவும் எழ
வரு நவீர்! கடைகள் திறமினோ! 49

முறுவல் - புன்சிரிப்பு. தாரம் - முத்து. முகிழ் - தாமரை மொட்டு. சிறு நிலா - மூன்றாம் பிறை. மிகு நிலா - நிறை நிலவு. நவீர் - நல்லீர்; பெண்களே! 'பிறை நிலவும் முழுநிலவும் ஒருங்கே தோன்றா; ஆனால், உங்களிடம் அவற்றைக் காணுகின்றோம்' எனப் புகழ்ந்தது இது.

திருகிச் செருகும் குழல் மடவீர்!

இளைஞரானோர் பெண்களின் முகம், முலை, கூந்தல் முதலிய உறுப்புகளைக் கண்டு மனம் உருகுவர். அவர் உயிர் நிலை உம் கையிலேதான். தேன் பொருந்திய செங்கழுநீர்ப் பூக்களையும் இளம் காதலரின் அருமையான உயிரையும் திருகிக் கூந்தலிலே வைத்து முடிக்கும் பெண்களே! செம்பொன்னாலாகிய உங்கள் கதவுகளைத் திறந்துவிடுங்கள்!

முருகிற் சிவந்த கழுநீரும்
முதிரா இளைஞர் ஆருயிரும்,
திருகிச் செருகும் குழல் மடவீர்,
செம்பொற் கபாடம் திறமினோ! 50

முருகு - தேன். கழுநீர் - செங்கழுநீர்ப் பூக்கள். திருகி - முறுக்கி. குழல் - கூந்தல். மடவீர் - இளம் பெண்களே! கூந்தலிலே மலர் சூடிவரும் மகளிரின் அந்த ஒப்பிலாத அழகினை வியந்து போற்றியது இது.

பெண்கள் கூடல் இழைத்தல்

கணவர் மனைவியரை விட்டுப் பிரியும் அந்நாளிலும் திரும்பி வந்து சேர்ந்த அந்நாளிலும், கூடிக் கலவி இன்பம் துய்ப்பர் என்பது உலக இயற்கை. தலைவரைப் பிரிந்த தலைவியர், 'தம் கணவர் விரைவில் வந்து சேர்வாரா மாட்டாரா?' என்பதை அறிவதற்காக, மணலில் அமர்ந்து வட்டமான பெரிய கோடு இழைப்பர். அதன் உள்ளே சிறு சிறு வளையங்களைக் கிழிப்பர். கடைசியில், அதனை இரண்டு இரண்டாக எண்ணுவர். அக்கோடு ஒற்றை எண் உடையதானால் விரைவில் வாரார் எனவும், தீர்மானிப்பர். உடம்போடு அணைத்து உள்ளம் குழைந்து ஆறுதல் கூறி நீங்கிய கணவர், 'திரும்பி வருவார்' என்று எண்ணிக் கூடல் இழைத்துப் பார்ப்பீர்கள். அவ்வாறு நீங்கள் பார்த்ததில் தோல்வியைக் கண்டதும், உடனே, கூடலிழைக்க உங்கள் கையால் குவித்த சிறு மணல்மேடு, உங்கள் கண்களிலிருந்து சொரியும் நீரால் கரைந்து போகும்படி, மனங்கரைந்து அழுவீர்கள்! அப்படி அழுபவரான பெண்களே, கதவைத் திறவுங்கள்!

மெய்யில் அணைத்து உருகிப் பைய அகன்றவர் தாம்
மீள்வர் எனக் கருதிக் கூடல் விளைத்து அறவே
கையில் அணைத்த மணல் கண்பனி சோர் புனலில்
கரைய விருந்து அழுவீர்! கடை திறமின்
திறமினோ! 51

மெய் - உடம்பு. உருகி - குழைந்து. பைய - மெல்ல. கூடல் விளைத்தல் - மணலில் வட்டச் சுழிக் கோடுகள் கிழித்துக் குறிபார்த்தல். அற - நீங்க.

ஊடுவீர்

உங்கள் கணவரோடு சேராமல் பிணங்கிக் கொள்வீர்கள். அதனால் புறந்தொழிலுக்கு உரியவும், கண்டோரால் விரும்பப்படும் அழகு உடையவுமான முலைகளாகிய செவ்விளநீர்க் காய்களின் இளந்தன்மை அழியவும், செவ்வரி பரந்த நீலோற் பலம்போன்ற கண்களிலிருந்து நீர் பெருகவும் விளங்குவீர்கள். அவ்வாறு ஊடிப்பிணங்கும் பெண்களே! பொன்மயமான உங்கள் கதவுகளைத் திறவுங்கள்!

செரு விளநீர் பட வெம்முலைச்
செவ் விள நீர்படு சேயரிக்
கருவிளம் நீர்பட ஊடுவீர்
கனக நெடுங் கடை திறமினோ! 52

செரு - போர். நீர்மை - தன்மை. பட - அழிய. வெம்முலை - விரும்பப்படும் முலை. படு - உண்டாகிய. சேயரி- சிவந்த கோடுகள். கருவிளம் - நீலமலர்போன்ற- கண்கள். நீர்பட - நீர்பெருக. கனகம் - பொன்.

நடந்துவரும் அழகு

நீங்கள் நடக்கும்பொழுது கூந்தலாகிய சுமை தலை மேல் அசையும். இடுப்பில் அணியும் மேலை ஆகிய மணிக் கோவையுடன் ஏனைய அணிகள் பலவும் சேர்ந்து ஒன்றாக அசையும். திரண்ட இரண்டு முலைகளும் இடைவிட்டு விலகாமல் நெருங்கி வரும் தன்மையுடையனவாகத் தாமும் அசைந்து கொண்டிருக்கும். இத்தகைய அழகுடன் நடந்து வருகிற பெண்களே! வாசலைத் திறவுங்கள்.

அளக பாரம் மிசை அசைய, மேகலைகள்
அவிழ, ஆபரண வகை எல்லாம்
இளக மாமுலைகள் இணை அறாமல் வரும்
இயல் நவீர்! கடைகள் திறமினோ! 53

அளகம் - கூந்தல். பாரம் - சுமை. மிசை - மேல். இளக- அசைய. அறாமல் - நீங்காமல். வரும் - அசைந்து வரும். இயல்- தன்மை.

இதழ் சுவைத்தல்

புணர்ச்சிக் காலத்திலே, குமுத மலர்போன்ற வாய் வெளுப்பவும், குவளை மலர்போன்ற கண்கள் சிவப்பவும், உங்களின் இனிமையான சொற்களும் தடுமாறின; ஒளிமிகும் படியான கண்கள் சிவந்தன; வாயின் உதடுகள் வெளுத்தன. உங்கள் கணவருடைய உதடுகளைச் சுவைத்தலால், கள்ளைக் குடித்தவர்போல அறிவு அழியப் பெற்றீர்கள்! இந்நிலையி லுள்ள பெண்களே, கதவைத் திறவுங்கள்!

மதுரமான மொழி பதற, வாள்விழி
சிவப்ப, வாய் இதழ் வெளுப்பவே!
அதர பானம் மதுபானம் ஆக, அறிவு
அழியும் மாதர்! கடை திறமினோ! 54

மதுரம் - இனிமை. பதற - தடுமாற. வாள் - ஒளி. இதழ் உதடுகள். அதரபானம் - இதழ் சுவைத்தல். மது - கள்.

முலை வேதும்! வாய் மருந்தும்!

விழுப்புண்பட்ட வீரர்களுக்குப் புண்களின் நோவு நீங்க ஒற்றடம் கொடுப்பது இயற்கை. உங்களுடைய கண்களாகிய வேல் தைத்துக் கணவர்களுக்குக் காம நோயாகிய புண்கள் உண்டாயின. அவற்றைப் பருத்த நும் முலைகளினால் வேது ஒற்றி, வாயிலிருந்து சுரக்கும் நீராகிய அமுதத்தை ஊட்டிப் போக்குகின்றவர்களே! சிறந்த பொன்னாலாகிய உயரமான கதவைத் திறவுங்கள்!

தங்கு கண்வேல் செய்த புண்களைத்
தடமுலை வேது கொண்டு ஒற்றியே,

செங் கனி வாய் மருந்து ஊட்டுவீர்!
செம்பொன் நெடுங் கடை திறமினோ! 55

தங்கு - படிந்த. தடம் - பெரிய. வேது - ஒற்றடம். ஒற்றி- அழுத்தி. செம்பொன் - சிறந்த பொன்.

கொங்கை வேதும்! கைக்கட்டும்

புண்பட்டவருக்கு வேது கொடுத்துப் பின் மருந்திட்டுக் கட்டுதல் இயல்பு. ஒன்றோடு ஒன்று மோதும்படியான உங்கள் கண்களாகிய வேல்கள், உங்கள் கணவராகிய இளையவர்களின் நெஞ்சிலே தைத்துத் துளைத்துச் சென்றன. அதனால், காமநோயாகிய புண்களைக் கணவர் பெற்றனர். அந்தப் புண்களின் நோவு நீங்கும்படி, கருமையான கண்களையுடைய உங்கள் இரண்டு முலை களின் சூடும் தாக்கும்படியாக அழுத்தி, மென்மையான கைகளால் தழுவிக் கட்டும் பெண்களே! கதவுகளைத் திறவுங்கள்! [கணவர்க்குத் தாங்கள் கொடுத்த நோயைத் தாங்களே வேதிட்டுப் போக்குவர் மகளிர்]

பொரும் கண் வேல் இளைஞர் மார்பின் ஊடுருவு
புண்கள் தீர, இரு கொங்கையின்
கரும் கண் வேது பட ஒற்றி, மென்கை கொடு
காட்டும் மாதர் கடை திறமினோ! 56

பொரும் - தாக்கும். ஊடுருவும் - தைத்துத் துளைத்துச் செல்லும். தீர - நீங்க. வேதுபட - வெப்பம் பொருந்த. ஒற்றி - அழுத்தி.

விழுதலும்! எழுதலும்!

பெண்கள் கூந்தலை முடித்து, அதில் தேனுள்ள மலர்களை அணிந்துகொள்வது வழக்கம். அவ்வாறு அணிந்து கொண்ட மலர்களிலுள்ள தேனைப் பருக வண்டுகள் வருவதும் போவதும் இயல்பு. நீங்கள் கூந்தலை முடித்து மலரைச் சூடியிருந்தீர்கள். வண்டுகள் தேனைப் பருக வந்து அமர்ந்தன. நீங்கள் முலைகளின் பாரம் பொறுக்க முடியாமல் சிற்றிடை வருந்த நின்றீர்கள். அந்த நேரத்தில் உங்களுடைய கூந்தலிலே அமர்ந்தால், 'உங்களுடைய இடை நிலைபெற்றிருத்தல் மிகவும் அரிது; பாரம் தாங்காமல் முறிந்து போகவும் கூடும்' என்று வண்டுகள் கருதின. அதனால் அவை முதலில் மேலே எழுந்து சென்றன. வேறு புகலிடம் ஒன்றும் கிடைக்காமையால், திரும்பவும் நும் கூந்தலிலே வந்து விழுந்தன. இவ்வாறு வண்டுகள் விழுவதும் எழுவதுமாயிருக்கும் இடமாயுள்ள மலர்க்கூந்தலையுடைய பெண்களே! உங்கள் அழகிய கதவுகளைத் திறந்து விடுங்கள்!

'இடையின் நிலை அரிது: இறும்,இறும்' என எழா,
'எமது புகலிடம் இனி இலை' என விழா,
அடை மதுகரம் எழுவது விழுவதாம்
அளக வனிதையர்! அணிகடை திறமினோ! 57

இடை - இடுப்பு. நிலை - நிலைபெற்று நிற்றல். இறும் - முறிந்து போகும். எழா - கூந்தலை விட்டு எழுந்து. புகல் இடம் - அடைக்கலத்திற்கு ஏற்ற இடம். விழா - கூந்தலில் விழுந்து. அடைய - முழுமையும். மதுகரம் - வண்டு. அகளம் - கூந்தல். வனிதை - பெண். கூந்தலின் இயற்கை மணத்தைப் புகழ்ந்தது இது.

சிலம்புகள் முறையிடல்!

உங்கள் கால்களில் ஒளிபொருந்திய சிலம்புகளை அணிந்திருப்பீர்கள். அவை, நீங்கள் நடக்கும்போது ஒலிக்கும். அப்படி ஒலித்த ஒலியானது, 'பெண்களே! உங்களுடைய இரண்டு முலைகளும் அசைந்தால் அவற்றின் பாரம் பொறுக்க மாட்டாமல், உங்களுடைய இடுப்பு ஒடிந்து போகும்! ஆதலால், நீங்கள் நடத்தலையே விட்டுவிடுங்கள்!' என்று சொல்வது போலவும், 'அபயம் அபயம்!' என்று கூவி முறையிடுவது போலவும் இருக்கும். அத்தகைய தளர் நடையினரான பெண்களே! கதவினைத் திறவுங்கள்!

'உபய தனம் அசையில், ஒடியும் இடை ; நடையை
ஒழியும், ஒழியும்!' என ஒண் சிலம்பு,
'அபயம்! அபயம்! என அலற,நடை பயிலும்
அரிவைமீர்! கடைகள் திறமினோ! 58

உபயம் - இரண்டு. தனம் - முலை. ஒழியும் - விட்டொழியுங்கள். ஒண் - ஒளி பொருந்திய. அலற - ஒலித்து முறையிட அரிவைமீர் - பெண்களே!

பெண்களுக்கும் காவிரியாற்றுக்கும் ஒற்றுமை

காவிரியாறு

மலர்ந்த பூக்களுள்ள தேனை வண்டுகள் பருகும், [illegible] இரண்டு கரைகளையும் புனலும் காவிரி விளங்கும்.

பெண்கள்

கூந்தலிலுள்ள மலர்ந்த பூக்களுள்ள தேனை வண்டுகள் பருகும், [illegible] போன்று [illegible] இருகரைகள் போன்று [illegible] இடையிலே புனலும் விளங்குகின்றன.

அந்தக் காவிரியாறு போல வருகின்ற இளம் பருவ முடைய பெண்களே! [illegible] திறவுங்கள்!

பூ விரி மதுகம் நுகரும்,
பொருநயல் இருகரை புனலும்
காவிரி மண வரும் மடநல்லீர்
கைகை நெடுஞ்சுடை திறுகினோ [illegible]

மதுகரம் - தேனைப் பருகும் வண்டு; [illegible] மீன் போன்ற கண்; [illegible] இருகரை - இரண்டு கரைகள் போன்ற [illegible]; காவிரியின் இருபுறக் [illegible] உள்ள கரைகள்; காவிரியில் [illegible] உவமிக்கப்பட்டன.

வண்டுகள் கூந்தலிற் பந்தலிடல்

மகளிர் கூந்தலை ஒழுங்காக வாரிவிட்டுப் பூக்கள் சூடி முடிக்கின்றனர். அந்தப் பூக்களில் உள்ள தேனைக் குடிக்க வண்டுகள் வந்து மொய்க்கின்றன. இவ்வாறு வண்டுகள் மொய்ப்பதானது, கணவனைப் பிரிந்து [illegible] பந்தல் போட்டிருப்பது போன்று இருக்கும். அத்தகைய கூந்தலையுடைய பெண்களே கதவைத் திறந்து விடுங்கள்!

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

பிறை - பிறைமதி போன்ற நெற்றி. குறுவெயர் - சிறு வியர்வை. வடம் - மாலை. குலைந்து அலைய - அழிந்து அசையவும். பூசல் - ஆரவார ஒலி. கலவி - புணர்ச்சி.

காஞ்சி இருக்க கலிங்கம் குலைந்தது

இடையிலே அணிந்துள்ள காஞ்சி என்னும் அணி ஒரு சிறிதும் குலையாமல் அப்படியே இருக்கும்படியாகவும், உடுத்த உடை நிலைமாறிக் கிடக்கும்படியாகவும், உங்கள் கணவரைக் கூடிக் களிக்கும் பெண்களே! வீரக்கழல் அணிந்த முதற் குலோத்துங்க சோழன் காஞ்சிபுரத்திலே தங்கியிருந்தான். ஆயினும், அவன் ஆணையால் கலிங்கநாடு அழிந்து போயிற்று. இவ்வாறு அழிந்துபோகும் அளவுக்குக் கலிங்கப் போர்க்களத்தில் நடந்த போரைச் சிறப்பித்து யானும் பாடப் போகின்றேன். அதனைக் கேட்டு மகிழ, நீங்களும் கதவைத் திறவுங்கள்!

காஞ்சி இருக்கக் கலிங்கம் குலைந்த
கலவி மடவீர்! கழற் சென்னி
காஞ்சி இருக்கக் கலிங்கம் குலைந்த
களப் போர் பாடக் கடை திறமின்! 63

காஞ்சி - இடை அணி; காஞ்சி நகரம். கலிங்கம் - ஆடை; கலிங்க நாடு. கலவி - புணர்ச்சி. சென்னி - சோழன்; குலோத்துங்கன். இருக்க - தங்கி இருக்க. குலைந்த - அழிந்த.

கருணாகரனின் போரைப் பாடலாம்

இலங்கை நாட்டை அழித்த கருணைக் கடலாகிய இராமனுடைய வன்மை பொருந்திய கொடிய வில்லின் பெருமையைக் கேட்க விரும்பும் பெண்களே! கலிங்க நாட்டை அழித்த முதற் குலோத்துங்க சோழனின் படைத் தலைவனான கருணாகரத் தொண்டைமான் கலிங்கக் களத்திலே நிகழ்த்திய போரை நான் புகழ்ந்து பாடப் போகின்றேன்; அதனையும் கேட்டுக் களிக்க உங்களுடைய தாளிட்ட கதவுகளைத் திறவுங்கள்! [கலிங்கப்போரின் வெற்றி இராமாயணப் போரினை நிகர்த்தது என்றது இது.]

இலங்கை எறிந்த கருணா கரன்தன்
இகல் வெம் சிலையின் வலி கேட்பீர்!

கலிங்கம் எறிந்த கருணா கரன்தன்
களப் போர் பாடக் கடை திறமின்! 64

கருணாகரன் - கருணைக்கடல்; இராமன். இகல் - வலி. வெம் - கொடிய. சிலை - வில். கேட்பீர் - கேட்க விரும்பும் பெண்களே! கருணாகரன் - முதற் குலோத்துங்க சோழனின் படைத் தலைவனான கருணாகரத் தொண்டைமான்.

நினைவும்! மறதியும்!

உங்களுடைய பேரன்புமிக்க கணவன்மார் செய்த குற்றங்கள் எல்லாவற்றையும், அவர்கள் பிரிந்த காலத்து அவர்களைக் காணாதபோது எண்ணி வருந்துவதும், அவர்கள் திரும்பி வந்ததும் அவரைக் கண்ட மாத்திரத்திலே அக் குற்றங்களை மறந்து மகிழ்வும் அன்பும் அடைவதுமான இயல்பையுடைய பெண்களே! அழகிய கதவைத் திறவுங்கள்! [பெண்கள் பிரிவுத் துன்பம் வருத்தியமையால் குற்றங்களை எண்ணி வருந்தினர்; கண்டபோது உண்டான பெருமகிழ்வால், அவற்றை அறவே மறந்தனர் என்க.]

பேணும் கொழுநர் பிழைகள் எலாம்
பிரிந்த பொழுது நினைந்து அவரைக்
காணும் பொழுது மறந்திருப்பீர்!
கனபொற் கபாடம் திறமினோ! 65

பேணும் - அன்பு செய்யும். கொழுநர் - கணவர். பிழை - குற்றம்.

உறவாடும் மடவீர்!

மணம் நிறைந்த சாந்தினைப் பூசிய தனங்கள் மார்பிலே குலுங்கும்! தேன் நிறைந்த பூமாலைகளைச் சூடிய கூந்தலிலிருந்து வண்டுகள் மேலே சென்று, ஆடும் ஊஞ்சலைப் போல இப்படியும் அப்படியுமாக அசையும்! கண்கள் இரண்டு கடை விழிகளோடும் சென்று சென்று போர் புரியும்! இவ்வாறாக உங்கள் கணவன்மாரோடு கலந்து கூடி உறவாடி மகிழ்கின்றவரான பெண்களே! எழுந்து வந்து கதவைத் திறவுங்கள்!

வாசம்ஆர் முலைகள் மார்பில் ஆட, மது
மாலை தாழ்குழலின் வண்டு எழுந்து
ஊசல்ஆட, விழிபூசல் ஆட,உறவு
ஆடுவீர்! கடைகள் திறமினோ! 66

வாசம் - மணம். ஆர் - நிறைந்த. மது - தேன். குழல் - கூந்தல். ஊசல் - ஊஞ்சல். வாழி - கண். பூசல் ஆட - ஒன்றோடொன்று போர் செய்ய.

வாய் புதைக்கும் மாதரே!

இரவு வேளை உங்கள் கணவருடன் அன்பை விளைவிக்கும் கலவி புரிந்து களி மயக்கத்திலே இருந்தீர்கள். அப்பொழுது நீங்கள் இருவர் மட்டுமே அறிந்திருக்கக்கூடிய பேச்சுக்களை உங்களுக்குள் பேசிக்கொண்டீர்கள். அதனை, அங்கிருந்து, சொன்னதையே திருப்பிச் சொல்லும் கிளிப் பிள்ளை ஒன்று, ஒட்டுக் கேட்டுவிட்டது. இரவும் விலகிற்று. பொழுதும் விடிந்தது. உங்களின் களிமயக்கமும் நீங்கிற்று. அந்தச் சமயத்தில், அந்தக் கிளி இரவு தான் கேட்டதைப் பலரும் அறியச் சொல்லத் தொடங்கிற்று. அதனைக் கேட்டு மிகவும் வெட்கமுற்று, அந்தக் கிளியினை மேலும் பேச விடாமல், அதன் வாயைப் போய்ப் பொத்திவிடுகின்ற செயலினைப் புரியும் பெண்களே! மணி பதித்த பொன்னால் ஆகிய கதவினைத் திறவுங்கள்.

நேயக் கலவி மயக்கத்தே
நிகழ்ந்த மொழியைக் கிளிஉரைப்ப
வாயைப் புதைக்கும் மடநல்லீர்!
மணிப்பொற் கபாடம் திறமினோ! 67

நேயம் - அன்பு. கலவி - புணர்ச்சி. மொழி - சொல். புதைக்கும் - பொத்தும். மடநல்லீர் - இளம் பருவமுடைய பெண்களே. வாயைப் புதைக்கும் - கிளியின் வாயினைப் பொத்தும் என்றும், 'கணவன் மனைவியராகிய தாங்கள் இருவரும் தனித்துப் பேசிக்கொண்டதைக் கிளி பலருமறியக் கூறுகின்றதே' என்று நாணித் தன் வாயைப் புதைத்துக்

கொள்ளும் என்றும் பொருள் கொள்ளலாம். மணி - இரத்தினம்.

மதியொளிக்கு நடுங்குவீர்

கணவரைப் பிரிந்த உங்களை நாள்தோறும் ஒளி மிகுந்த நிலவு குளிர்ந்த கதிரால் வெப்பத்தைச் செலுத்தித் தாக்கி வந்தது. அந்த வெப்பத் தாக்குதலைப் பொறுத்துக் கொண்டு வெளியில் இருக்க இயலவில்லை. அதனால் பயந்து படுக்கையறைக்குள் புகுந்து தங்குவீர்கள். ஆனால் அங்கோ, காம வெப்பம் உங்களைத் தாக்கி வருத்தவே, அதனால் அந்தப் பள்ளியறையைப் 'புழுக்கறை' என்று கருதி, அங்கும் இருக்கப் பயப்படுவீர்கள். இத்தகைய தன்மையுள்ள பெண்களே! அழகிய பொன்னாலான கதவினைத் திறவுங்கள்!

பொங்கும் மதிக்கே தினம் நடுங்கிப்
புகுந்த அறையை நிலவறை என்று
அங்கும் இருக்கப் பயப்படுவீர்!
அம்பொற் கபாடம் திறமினோ! 68

பொங்கும் - ஒளி மிகும். மதி - நிலவு. நடுங்கி - பயந்து. அறை - படுக்கையறை. நிலவறை - நிலத்தின் கீழ் அமைக்கப் பட்ட காற்றுப் புகாத அறை; புழுக்கறை. அம் - அழகிய.

தேயும் குடுமி

கணவன்மார் குறித்துச் சென்ற காலம் வந்தது. அவர் தம் வருகையை எதிர்பார்த்து வாசலில் வந்து கதவைத் திறந்து வழிமேல் விழிவைத்து நிற்பீர்கள். அவர்கள் வரவில்லையானால் ஒரே ஏமாற்றம். வெறுப்பால் கதவைப் 'படார்' எனச் சாத்துவீர்கள். இவ்வாறாக இரவு தொடங்கிப் பொழுது விடியும் வரையும் 'வருவார்' என எதிர்பார்த்துக் கதவைத் திறப்பதும், 'வாரார்' எனச் சினந்து கதவை மூடுவதுமாக இருந்தமையால், கதவிலுள்ள கழலும் குடுமியும் தேய்ந்து போய்விடும். இத்தகு செயல்புரியும் பெண்களே! கதவினைத் திறந்து விடுங்கள்!

'வருவார் கொழுநர்' எனத் திறந்தும்,
'வாரார் கொழுநர்' என அடைத்தும்,

திருகும் குடுமி விடியளவும்
தேயும் கபாடம் திறமினோ! 69

கொழுநர் - கணவர். திருகும் - சுழலும். கபாடம் - கதவு.

ஊடலும் கூடலும்

கணவரிடத்தில் சிறிது நேரம் ஊடியிருப்பீர்கள். பிறகு அந்தப் பிணக்கு நீங்கிக் கூடியிருப்பீர்கள். இவ்வாறு கூடியபோது மிக்க இன்பக் களிமயக்கம் அடைந்து நும் நினைவற்று உங்களையே மறந்திருப்பீர்கள். இந்த நிலையில் உங்களையே கூடத் தேடியுங்கொள்வீர்கள் நும் தனித்தன்மை யற்று இரண்டறக் கலப்பீர்கள். இத் தன்மை யுடைய பெண்களே! கதவினைத் திறவுங்கள்!

ஊடுவீர், கொழுநர் தங்கள்பால்! முனிவு
ஒழிந்து கூடுதலின் உங்களைத்
தேடுவீர்! கடைகள் திறமினோ! இனிய
தெரிவைமீர்! கடைகள் திறமினோ! 70

ஊடுவீர் - பிணக்கம் கொள்வீர். கொழுநர் - கணவர். முனிவு - பிணக்கம்; ஊடல். தெரிவை - பெண்.

கண்ணின் இயல்பு

உங்களுடைய இசைபோன்ற இனிய சொற்களை, 'அமுதம் போன்றது' என்று கணவன்மார்கள் புகழ்ந்து பேசுவர். அத்தகைய கணவரைப் பரத்தையர்பால் விரும்பிச் செல்ல விடாமல், உங்கள் வசமாக்கிக் கொள்வதற்காகக் கண்களைக் கொண்டு கொலையாகிய துன்பத்தைச் செய்வீர்கள். பிறகு, அருளும் புரிவீர்கள். இத்தகைய தன்மையுள்ள பெண்களே! அழகிய கதவினைத் திறவுங்கள்!

பண்படு கிளவியை அமுது எனப்
பரவிய கொழுநனை நெறிசெயக்,
கண்கொடு கொலைசெய அருளுவீர்!
கனக நெடுங்கடை திறமினோ! 71

பண் - இசை. படு - ஒத்த. கிளவி - சொல். பரவிய - புகழ்ந்த. நெறி செய - தங்கள் வசம் ஆக்கிக்கொள்ள; நன்னெறிப் படுத்தவும் ஆம். கொடு - கொண்டு. கொலை - கொலைபோன்ற துன்பம்.

தரையில் விரல் எழுதுவீர்

கணவர் உங்களோடு சேர்ந்திராமல் பிரிந்து போருக்குச் செல்ல நினைத்தனர். அதை எப்படிச் சொல்வது என்று பயந்து நின்றனர். ஆனால், அவரது பிரிவைத் தடுக்க இயலாத நீங்கள், 'பிரியேன், பிரியின் தரியேன்' என்று முன்னர் அவர் உறுதி கூறியதை மீறிப் பிரிந்து செல்லக் கருதிய பிழையை நினைத்து மனம் தளர்ந்து, கண்ணீரை மழையாகப் பொழிந்தும், கால் பெருவிரலால் நிலத்தைக் கீறியும் நிற்பீர்கள். இத்தகைய தன்மைபொருந்திய இளம் பெண்களே! கதவினைத் திறவுங்கள்!

பிழை நினைந்து உருகி, அணைவுறா மகிழ்நர்
பிரிதல் அஞ்சி, விடு கண்கள் நீர்
மழை ததும்ப விரல் தரையிலே எழுதும்
மடநலீர் கடைகள் திறமினோ! 72

பிழை - கணவன் மனைவியை விட்டுப் பிரிய நினைத்த குற்றம்; தன் உறுதி பிழைத்த குற்றமும் ஆம். அணைவுறா. மனைவியோடு சேர்ந்திருக்காமல். மகிழ்நர் - கணவர். கண்கள் நீர் மழை - கண்களிலிருந்து பெருகி வழியும் நீராகிய மழை. ததும்ப - மிக. விரல் - கால் பெருவிரல். எழுதும்-கீறும்.

குலோத்துங்கன் போன்றீர்

குலோத்துங்கன்

முதற் குலோத்துங்க சோழன், சிறந்த காஞ்சிபுரத் திற்கும் வடக்கிலுள்ள இமயமலைக்கும் நடுவிலுள்ள காட்டையடுத்த, கலிங்க நாட்டிலுள்ள வெற்றிடமாகிய போர்க்களத்திலே, விலங்கு பறவை முதலியவற்றின் உயிர்களைக் கவரும் வேடனைப் போன்ற படைத் தலைவனான கருணாகரத் தொண்டைமானை ஏவிப், பகைவர்களின் உயிரைக் கவர்ந்தான், அதுபோலவே -

பெண்கள்

சிறந்த மேகலை என்னும் அணிக்கும் முத்துமாலை அணிந்த மலைபோன்ற தனங்களுக்கும் நடுவிலுள்ள வெற்றிடமாகிய இடுப்பின் அழகாலும், கலவைச் சந்தனத்தின்

மணத்தையுடைய மலைபோன்ற தனங்களின் அழகாலும், காம வேதனையை மிகச்செய்து நும் வசம் ஆக்கிக் கொள்ள மன்மதனை ஏவிக் கணவர்களின் உயிரைக் கவர்வீர்கள். இத்தகைய பெண்களே! மிகவும் அழகிய கதவினைத் திறந்து விடுங்கள்!

நக் காஞ்சிக்கும் வட மலைக்கும்
நடுவில் வெளிக்கே வேடனை விட்டு
அக் கானகத்தே உயிர் பறிப்பீர்!
அம் பொற் கபாடம் திறமினோ! 73

ந - நல்ல. காஞ்சி - காஞ்சிபுரம்; மேகலை என்னும் அணி. வடமலை - வடக்கேயுள்ள இமயமலை; வடமலை - முத்துமாலை அணிந்த மலைபோன்ற முலை. வெளி - போர்க்களம்.

பூவும் உயிரும் செருகுவீர்!

செக்கச் சிவந்த செங்கழுநீர்ப் பூக்களையும், இளைஞர்களாகிய கணவர்களின் சிறந்த அரிய உயிரையும், இந்த உலகத்திலே ஒன்றாகப் பறித்துச் செருகக்கூடிய கூந்தலையுடைய பெண்களே! உங்களுடைய அழகிய கதவுகளைத் திறவுங்கள்!

செக்கச் சிவந்த கழுநீரும்
செகத்தில் இளைஞர் ஆர் உயிரும்
ஒக்கச் செருகும் குழல் மடவீர்!
உம் பொற் கபாடம் திறமினோ! 74

கழுநீர் - செங்கழுநீர்ப்பூ. செகம் - உலகம். ஒக்க - ஒருசேர. குழல் - கூந்தல். பொன் - அழகு.

கூடலால், பெண்களின் கண்கள் கலங்கிச் சிவந்து பிறழ்வதைச் செக்கச் சிவந்த கழுநீரைச் செருகுவதாகவும், தம்பால் ஒன்றுபட்ட நிலையினராக இரண்டறக் கலந்து தம் நினைவிழந்துவிடும் கணவராகிய இளைஞர்களின் உயிர் அவர் வசமாய்விடும் நிலையினை உயிரைச் செருகுவதாகவும் உரைக்கின்றனர்.

♦□♦

3. காடு பாடியது

[பாலை நிலத்தையும், அது வெம்மை மிகுதியால் விளங்கும் இயல்பையும் பற்றிப் பாடிய செய்யுட்களின் பகுதி]

காடு பாடுவோம்

போரில் இறந்த கலிங்க வீரர்களுடைய நிணத்தாலாகிய உணவைத் தந்து, ஒப்பற்ற கலிங்கப் போர்க்களத்திலுள்ள பேய்களினுடைய வயிற்றினை இரண்டு பங்காக நிறையச் செய்தாள் காளி தேவி. அவள் வாழுமிடம் பாலை நிலத்தைச் சார்ந்த காடு. அதன் சிறப்பை இனிப் பாடுவோமாக!

களப் போர் விளைந்த கலிங்கத்துக்
கலிங்கர் நிணக்கூழ் களப் பேயின்
உளப்போர் இரண்டு நிறைவித்தாள்
உறையும் காடு பாடுவாம். 75

நிணம் - தசை; கொழுப்பு. உளப்பு - உளம்பு; வருத்தம். நிறைவித்தாள் - நிறைவித்தவள்; காளி. உறையும் - வாழும். களப்போர் - களங்கொண்டு ஆற்றிய போர்.

மரம் செடி கொடிகள்

பொரி பொரியாய்ப் போன காரைச் செடிகள், கருகிப் போன குரை மரங்கள், புகைந்து எரிந்துபோன வீரை மரங்கள், தீப்பற்றி எரிந்த மூங்கில் மரங்கள், மேற்பட்டை உரிந்த பாரை மரங்கள், முறிக்கப்பட்ட பாலை மரங்கள், காய்ந்த ஓமை மரங்கள் முதலியவை அப்பாலை நிலத்தில் எங்கணும் விரவியிருந்தன.

இலை, பழம் முதலியன உதிர்ந்த விளாமரங்கள், உலர்ந்த நெல்லி மரங்கள், காய்ந்துபோன தும்பைச் செடிகள், உலர்ந்த வேலமரங்கள், பிளந்த முள்ளிச்செடிகள், சூறாவளியால் சிதைந்த வள்ளிக் கொடிகள், பிளவுபட்ட கள்ளிமரங்கள் ஆகியவை அப் பாலை நிலமெங்கும் பரவி யிருந்தன.

13. களம் பாடியது.

[முதற் குலோத்துங்க சோழனுடைய படைத் தலைவ னான கருணாகரத் தொண்டைமான் கலிங்க நாட்டவ ரோடு புரிந்த போர்க்களத்தில் வீரச் செய்திகளை ஆசிரியர் இப் பகுதியில் வருணித்துக் கூறுகிறார்.]

களச் சிறப்பு

'பதினெட்டு ஆண்டுகள் நடைபெற்ற தேவர் - அசுரர் போர், பதினெட்டுத் திங்கள் நிகழ்ந்த இராமாயணப் போர், பதினெட்டு நாள் நடந்த மகாபாரதப்போர் ஆகியவைதாம் இவ்வுலகில் சிறப்புப் பெற்று இருக்கின்றன' என்று எல்லா ரும் சொல்லிவந்த நீங்காத பேச்சுக்கள் நீங்கும்படி, கருணா கரன் கலிங்கரோடு புரிந்த போர்க்களமானது, அவற்றிலும் மிகச் சிறந்து விளங்குகின்றது.

'தேவாசுரம், ராமாயணம்
மா பாரதம், உள என்று
ஓவா உரை ஓயும்படி
உளது, அப் பொரு களமே! 473

தேவாசுரம் - தேவர் அசுரர் போர். ஓவா - ஒழியாத. உரை - சொல்; பேச்சு. பொருகளம் - கருணாகரன் போர் புரிந்த கலிங்கப் போர்க்களம்.

பேய் வேண்டக் காளி அணுகல்

நஞ்சு பூண்ட கழுத்தை உடையவர் சிவபெருமான். அவர் கண்டு களிக்கின்ற அமுதை ஒத்தவள் காளிதேவி. அவளிடம் கலிங்கப் பேய், 'தேவி! எமனது கொலைக்களமாகிய இந்தப் போர்க்களத்தை வந்து பார்த்தருளுவாயாக' என்று வேண்டிக் கொண்டது. உடனே, காளிதேவி புறப்பட்டுக் கலிங்கப் போர்க்களத்தைச் சென்று அடைந்தாள்.

'காலக் களம் அது கண்டருள் -
இறைவி! கடிது' எனவே,
ஆலக் களம் உடையான் மகிழ்
அமுது அக் களம் அணுகி. 474

*களம் காட்டியது எனவும் பாடம்.

காலன் - எமன். இறைவி! - காளியே! கடிது - விரைவில். ஆலம் களம் உடையான் - நஞ்சைக் கழுத்தில் உடையவன். மகிழ் அமுது - களிக்கும் அமுது போன்றவளாகிய காளிதேவி.

காளி களம்கண்டு வியத்தல்

களம் அடைந்த காளி, 'இந்தக் கொடிய போர்க்களம் இருந்தவண்ணம் தான் என்னே!' என்று வியப்படைந்தாள். தன்னுடன் வந்திருந்த பேய்க் கூட்டத்தைப் பார்த்துப் போர்க்களத்தின் சிறப்பைக் காணுமாறு சொல்லத் தொடங்கி னாள்:

'என்னே ஒரு செரு வெங்களம்!'
எனவே அதிசயம் உற்று,
அந் நேரிழை அலகைக் கணம்
அவை கண்டிட, மொழியும் - 475

செரு - போர். நேர் இழை - செவ்வையாகிய அணிகளை அணிந்த காளி. அலகை - பேய். கணம் - கூட்டம்.

யானையும் கப்பலும்

போர்க்களம் எங்கும் ஒரே இரத்த வெள்ளம், அவ் வெள்ளத்தில், உடம்பில் உண்டான புண்களிலிருந்து இரத்தம் வடிதலையும், பின்னங் கால்களில் அசைவையும் உடைய யானைகள், ஒன்றன் பின் ஒன்றாக நீந்திச் செல்கின்றன. இந்தக் காட்சி, கடலில் கப்பலின் பின்னே கப்பல் தொடர்ந்து செல்லுதலை ஒத்திருக்கின்றது; பேய்களே பாருங்கள்! பாருங்கள்!

உடலின்மேல் பல காயம் சொரிந்து, பின் கால்
உடன் பதைப்ப உதிரத்தே ஒழுகும் யானை,
உடலின்மேல் கலம் தொடரப் பின்னே செல்லும்,
கலம்போன்று தோன்றுவன, காண்மின், காண்மின்! 476

காயம் - புண். சொரிந்து - இரத்தத்தைப் பொழிந்து. பதைப்ப - அசைய. உதிரம் - இரத்தம். ஒழுகுதல் - நீந்திச் செல்லுதல். கலம் - கப்பல்.

குதிரையும் குதிரைத் தறியும்

பெரிய குதிரைகள் தம்மீது இட்ட சேணங்கள் சரியும் படியாகப் பாய்ந்து செல்கின்றன! அப்படிச் செல்லும் போது அவற்றின் கால்கள் கொழுப்பாகிய சேற்றில் அழுந்துகின்றன, இந்நிலையில் புதைந்த கால்களை எடுக்க முடியாதபடி குதிரைகள் வரிசையாக நிற்கின்றன. இந்தக் காட்சி, இரத்த வெள்ளத்தை அடைக்க வரிசையாக அமைந்த குதிரை மரங்களை ஒத்திருக்கின்றது பாருங்கள்!

நெடுங் குதிரை மிசைக் கலணை சரியப் பாய்ந்து
நிணச் சேற்றில் கால் குளிப்ப நிரையே நின்று,
படுங் குருதிக் கடும் புனலை அடைக்கப் பாய்ந்த
பல குதிரைத் தறி போன்ற பரிசு காண்மின்! 477

மிசை - மேலே. கலணை - சேணம்; தவிசு; 'கலனை' எனவும் பாடம். நிணம் - கொழுப்பு. குளிப்ப -அழுந்த. நிரை - வரை. கடும் புனல் - பெருவெள்ளம்; விரைந்து பாயும் நீர். பல குதிரைத் தறி - வெள்ளத்தை அடைத்துத் தடுக்க அமைக்கும் மரப்பலகை. பரிசு - தன்மை.

வீரர் முகமலர்ந்து கிடந்தமை

விருந்தினரும் ஏழைகளும் தம்மிடமிருந்து உணவைப் பெற்று ஒருசேர இருந்து உண்ணுதலைப் பார்க்கும்போது, மேலும் மேலும் களிப்பால் முகமலர்ச்சி அடையும் இல்லறத்து உயர்ந்த பெரியவர்கள்போல, பருந்துகளும் கழுகுகளும் தம் உடலையே உண்ணக் களத்தில் இறந்து கிடக்கும் வீரர்கள். தாமரை மலர் போன்ற தங்கள் முகம் மேலும் மலர்ந்து காணப்படுகின்றார்கள். பேய்களே! அவர்களைப் பாருங்கள், பாருங்கள்'

விருந்தினமும் வறியவரும் நெருங்கி உண்ண,
மென்மேலும் முகம் மலரும் மேலோர் போலப்
பருந்தினமும்; கழுகினமும் தாமே உண்ணப்
பதுமமுகம் மலர்ந்தாரைப் பார்மின்! பார்மின்! 478

வீரர்களும் கருமிகளும்

தாங்கள் இறக்கும் வரையிலும் மற்றவர்களுக்கு ஒரு சிறு பொருளும் உதவி செய்யாதவர்கள் உலோபிகள். அவர்களை விரும்பி அடைகிறார்கள் மூடர்கள். அந்த மூடர்களைப் போல, கொலையுண்ட வீரர்களின் உடம்பில் நிலைத் திருக்கும் உயிர் நீங்கும் வரையிலும், அவர்களின் அருகிலேயே இருந்துவிட்டு, பின்னும் அவர்களைவிட்டு நீங்கா திருக்கின் றன நரிக் கூட்டங்கள். அவற்றைப் பாருங்கள்!

சாம் அளவும் பிறர்க்கு உதவா தவரை நச்சிச்
சாருநர்போல, வீரர் உடல் தரிக்கும் ஆவி
போம் அளவும் அவர் அருகே இருந்து விட்டுப்
போகாத நரிக் குலத்தின் புணர்ச்சி காண்மின்! 479

சாம் அளவும் - சாகும் வரையும். நச்சி - விரும்பி, சாருநர்- அடைவோர். தரிக்கும் - நிலைத்திருக்கும். ஆவி - உயிர். போம் அளவும் - போகும் வரையும். புணர்ச்சி - கூட்டம்.

வண்டும் விலைமாதரும்

யானைகள் போர்க்களத்தில் பெருமழை பெய்வது போல மதநீரைச் சொரிந்து கொண்டிருந்தன. அந்த மதநீர் பொழியும் வரையிலும் வண்டுகள் யானைகளைப் பற்றி யிருந்தன. யானைகள் இறந்துவிட்டன! மதநீரும் ஒழிந்து விட்டது. அந்தச் சமயத்தில் கருணாகரனது வெற்றி கண்டு தேவர் பூமழை பொழிந்தனர். உடனே வண்டுகள் மேலே பறந்து சென்றுவிட்டன. இக் காட்சி விலைமகளிர் பொருள் இருக்கும் வரையிலும் ஒருவனைப் பற்றியிருந்து, அவனிடத் திருந்த பொருள் முற்றும் தீர்ந்தபின், வேறொருவனைப் பற்றுவது போல் இருக்கிறது பாருங்கள்!

மா மழைபோல் பொழிகின்ற தான வாரி
மறித்து விழும் கடகளிற்றை வெறுத்து, வானோர்
பூ மழைபோல் பாய்ந்து, எழுந்து, திரந்த வண்டு
பொருட் பெண்டிர் போன்றவையும் காண்மின்;
காண்மின்! 480

தானம் - மதநீர். வாரி - பெருக்கு. மறித்து - ஒழித்து. கடம் களிறு - மத யானை. வானோர் - தேவர். நிரந்த - பரவிய. பொருட் பெண்டிர் - பொருளையே விரும்பும் பெண்கள்; விலை மாதர்.

கொடியோடு கிடக்கும் யானைகள்

போர்க்களத்தில் பெரிய இரத்த வெள்ளம். அதில் மத யானைகள் சாய்ந்து விழுந்து கிடக்கின்றன. அவற்றோடு அரசர்க்குரிய கொடிகளும் சாய்ந்து படுத்து கிடக்கின்றன. இக்காட்சி, சுடுகாட்டில், நெருப்பாகிய படுக்கையில் கணவரினோடு கற்புடைய மகளிர் உடன்கட்டை ஏறிக் கிடந்ததனை ஒத்திருக்கின்றது பாருங்கள்!

சாய்ந்து விழும் கடகளிற்றி னூடே சாய்ந்து,
கடங்குருதி மிசைப்படியும் கொடிகள், தங்கள்
காந்தருடன் கனல் அமளி அதன்மேல் வைகும்
கற்புடை மாதரை ஒத்தல் காண்மின், காண்மின்!
481

கடம் - மதம். குருதி - இரத்தம். மிசை - மேலே. காந்தர் - கணவர். கனல் - தீ. அமளி - படுக்கை. வைகும் - தங்கும்.

கணவரைத் தேடும் மகளிர்

கற்புடைய மகளிர் சிலர், 'தங்கள் கணவருடன் தாங்களும் சேர்ந்து உயிர் விட்டுவதன்முன், போர்க்களத்தில் வீரச் சாவு பெற்றுக் கிடக்கும் தங்கள் கணவரின் முகங்களை ஒரு முறையேனும் காணவேண்டும்' என்னும் பெருவேட்கையால் களம் புகுந்தனர். எம் கணவர் எந்த இடத்தில் கிடக்கின்றார்? என்று எல்லோரும் தனித்தனியாகக் காளியின் மெய்க் காப்பாளர்களாகிய சாதகரைக் கேட்டனர். அவர் ஒன்றும் பதில் சொல்லாமையால், தாங்கள் தங்கள் கைகளால் களம் முழு வதும் தடவிப் பார்த்தார்கள். அப்பொழுதும் காண முடியவில்லை. கடலைக்கு எடுத்துப் போயிருப் பார்களோ என்ற எண்ணம் உதித்தது. உடனே அங்குச் சென்றார்கள் அங்கே பிணங்களைத் தின்னும் பேயாகிய 'இடாகினி' என்னும் பேய் இருந்தது. அதனிடம், 'எம் கணவர் எங்கே கிடக்கிறார்?' என்று கேட்டுப் பார்க்கிறார்கள். இதையும் பாருங்கள்!

'நம் கணவருடன் நாமும் போக என்றே
சாதகரைக் கேட்பரே, தடவிப் பார்ப்பார்;
'எம் கணவர் கிடந்த இடம் எங்கே!' என்று என்று,
இடாகினியைக் கேட்பாரைக் காண்மின்,காண்மின்!
482

சாதகர் - காளிதேவியின் மெய்க்காப்பாளர். இடாகினி - கடலைக்குக் கொண்டு வரப்படும் பிணங்களைத் தின்னும் பேய் வகை.

ஆவி சோரும் மனைவி

போர்புரியக் களத்துக்குச் சென்ற வீரனொருவன், அங்கு உதடுகளை மடித்துக் கொண்டு கிடந்தான். அவனைக் கண்டாள் அவன் மனைவி. அவன் ஒன்றும் பேசவில்லை. வெற்றியுடன் மீளவும் இல்லை. அவனைப் பார்த்து, 'நீ இதழ் மடித்துக் கிடப்பதற்குக் காரணம் என்ன? அழகிய உதடுகளில் ஏதேனும் வடுப்பட்டாயோ?' என்று கூவிப் புலம்பினாள். வெறுப்பு மிகுதியால் அவனருகே நின்று தானும் உயிர்விடு கின்றாள். அவளையும் பாருங்கள்!

வாய் மடித்துக் கிடந்ததலை மகனை நோக்கி,
'மணி அதரத்து ஏதேனும் வடு உண்டாயோ?
நீ மடித்துக் கிடந்தது! எனப் புலவி கூர்ந்து,
நின்று ஆவி சோர்வாளைக் காண்மின், காண்மின்! 483

வாய் - உதடு. தலைமகன் - கணவன். மணி - அழகிய. உதரம் - உதடு. புலவி - வெறுப்பு. கூர்ந்து - மிக்கு. ஆவி - உயிர். சோர்தல் - உயிர் விடுதல்.

கணவனைத் தழுவி உயிர்விடும் பெண்

தன் கணவனுடைய உடம்பை நிலமகளும் தாங்குதற்கு விடாமல், தன் மார்போடு அணைத்துக்கொண்டு, தேவருலகத் தெய்வப் பெண்கள் அவனுடைய உயிரைத் தழுவுவதற்கு முன்பே, தன் உயிரையும் தன் கணவனின் உயிரோடு ஒருசேர விடுகிறாள் ஒருத்தி. அவளைப் பாருங்கள்!

தரைமகளும்தன் கொழுநன் உடலம் தன்னைத்
தாங்காமல் தன் கரத்தால் தாங்கி, விண்ணாட்டு

அரமகளிர் அவ் உயிரைப் புணரா முன்னம்,
ஆவிஒக்க விடுவாளைக் காண்மின்,காண்மின். 484

தரைமகள் - நிலமகள். கொழுநன் - கணவன். விண்நாடு - தேவருலகம். அரமகளிர் - தெய்வப் பெண்கள். புணரா முன்னம் - தழுவுவதற்கு முன்பே. ஆவி - உயிர். ஒக்க - சேர.

தலை பெற்ற மனைவி செயல்

போர்க்களத்தில் வீரச் சாவுற்றுக் கிடக்கிறான் வீரன் ஒருவன். களத்தில் அவனைத் தேடிவந்த அவன் மனைவிக்கு அவனது தலை மட்டுமே கிடைத்தது. ஏனைய உறுப்புக் களைக் காணவில்லை. நாயோ நரியோ இழுத்துச் சென்றிருக்க வேண்டும். களத்தில் யோகினி என்னும் பெண் தெய்வம் ஒன்று இருந்தது. அதனைப் பார்த்து, அவள், ' என் கணவனுடைய போர்புரிந்த பெரிய கைகள் எங்கே? அக் கையில் பிடித்திருந்த வீரவாள் எங்கே? அழகிய மார்பு எங்கே? போரில் எத்தகைய வீரர்கள் எதிர்த்து வந்தாலும் முதுகு காட்டி ஓடாத பெரிய வல்லமை பொருந்திய தோள்கள் எங்கே? எங்கே?' என்று கேட்கிறாள் அதனைப் பாருங்கள்!

'பொரு தடக்கை வாள் எங்கே? மணி மார்பு எங்கே?
போர்முகத்தில் எவர் வரினும் புறங்கொடாத
பரு வயிரத்தோள் எங்கே, எங்கே? என்று
பயிரவியைக் கேட்பாளைக் காண்மின்,காண்மின்.485

பொரு - போர் புரியும். தடம் - பெரிய. கை வாள் - கையும் வாளும். மணி - அழகிய. வயிரம் - உறுதியான. பயிரவி - யோகினி என்னும் ஒரு பெண் தெய்வம்.

கருமேகம் செம்மேகத்தை ஒத்திருத்தல்

போர்க்களத்தில் வீரர்கள் குதிரைகளோடு குதிரைக ளையும் வீரர்களோடு வீரர்களையும் பிடித்து மோதி அடித்தார்கள். அவ்வாறு அடிக்கும்போது, அவற்றினின்றும் பீறிட்டெழுந்த மிகுந்த இரத்தம் வானத்திலும் சிதறித் தெறித்தது. அதனால், வானத்திலிருந்த கரிய மேகங்கள் எல்லாம் சிவந்த மேகங்களாகத் தெரிகின்றன. அவற்றைப் பாருங்கள்!

ஆடல் துரங்கம் பிடித்து, ஆளை ஆளோடு
அடித்துப் புடைத்து அவ்விரும் புண்ணின் நீர்
ஓடித் தெறிக்க, கருங் கொண்டல் செங்கொண்டல்
ஒக்கின்ற இவ்வாறு காண்மின்களோ! 486

ஆடல் - போர். துரங்கம் - குதிரை. இரு - பெரிய. புண்ணின் நீர் - இரத்தம். கொண்டல் - மேகம். ஆறு - தன்மை.

கருங்காகம் வெண்காகத்தை ஒத்திருத்தல்

பிணங்கள் பெருவாரியாகக் கிடக்கின்ற, இரத்தம் பரவி யிருக்கின்ற சிவந்த போர்க்களத்தில், கொழுப்புக்களும் நிறையக் கிடக்கின்றன. பிணந் தின்ன வந்த காகங்கள், அந்த வெள்ளிய கொழுப்புக்களைப் போர்வையாக மூடிக் கொண்டுவிட்டன. அதனால், கரிய காகங்கள் வெண்ணிறக் காகங்களாகத் தோற்றமளிக்கின்றன. இத்தகைய வெண் காகங்களை நீங்கள் இதற்கு முன்பு பார்த்திருக்கவே முடியாது. ஆதலால், இப்பொழுது நன்கு பாருங்கள்!

நெருங்கு ஆக வச் செங்களத்தே
தயங்கும் நிணப்போர்வை மூடிக் கொளக்
கருங்காகம் வெண் காகமாய் நின்றவா
முன்பு காணாத, காண்மின்களே! 487

நெருங்கு - பிணங்கள் நெருங்கிக் கிடக்கின்ற. ஆகவம் - போர். தயங்கும் - விளங்கும். நிணம் - கொழுப்பு. நின்றவா(று)- நின்ற தன்மை.

போர்க்களம் தாமரைக்குளத்தை ஒத்திருத்தல்

போர்க்களத்தில் தேரின் மொட்டுக்கள் தாமரை மொட் டுக்களைப் போலவும், இரத்தம் நீரைப் போலவும், வீரர் களுடைய மயிர்கள் பசிய இலைகளாகிய பாசியைப் போலவும் கிடக்கின்றன. இவை அனைத்தும் பொருந்திக் கிடக்கின்ற போர்க்களம், தாமரை மலர்களையுடைய குளத்தை ஒத்திருக்கின்றது அதனைப் பாருங்கள்!

மிடையுற்ற தேர்மொட்டு மொட்டு ஒக்க,
வெம்சோரி நீர் ஒக்க, வீழ் தொங்கல்
பாசடை ஒக்க, அடுசெங் களம் பங்கயப்
பொய்கை ஆமாறு காண்மின்களோ! 488

மிடை உற்ற - நெருங்கி இருக்கின்ற. மொட்டு - அரும்பு. சோரி - இரத்தம். தொங்கல் - மயிர். பாசு அடை - பசிய இலை. அடு - அட்ட. பங்கயம் - தாமரை. பொய்கை - குளம்.

வீரர் மூங்கிலை ஒத்திருத்தல்

போர்க்களத்தில் வீரர்கள் ஒளியும் கூர்மையும் உடைய வேல் கருவிகள் உடம்பு முழுமையும் தைக்கப்பெற்றும் நிலத்தில் விழாது நிற்கிறார்கள். இந்தக் காட்சி, கழைக் கூத்தர்களால் அவர்களுடைய கயிற்றைக் கொண்டு இழுத்துக் கட்டப்பட்டுச் சாவாமல் நிலைத்து நிற்கும் மூங்கிலை ஒத்திருக்கின்றது. பாருங்கள்!

வெயில் தாரைவேல் குழவும் தைக்க,
மண்மேல் விழாவீரர், வேழம்பர் தம்
கயிற்றால் இழுப்புண்டு, சாயாது நிற்கும்
கழாய் ஒத்தல் காண்மின்களோ! 489

வெயில் - ஒளி. தாரை - கூர்மை. குழ - உடம்பெங்கும் சூழ. மண் - நிலம். விழா - விழாத. வேழம்பர் - கழைக் கூத்தாடிகள். கழாய் - மூங்கில்.

பருந்தும் கழுகும் துன்புறல்

போர்க்களத்தில் இறந்துபட்ட வீரர்களின் உடல் குறைகள் கிடக்கின்றன. அவற்றைத் தின்ன வந்தன கழுகு. பருந்து முதலிய பறவைகள். வீரர்களின் உடலைப் பறவைகள் படிந்து கொத்தித் தின்னும்போது, அவர்களுடைய கைகளிலிருந்த இரும்பாலாகிய வேல்கள் அழுந்திக் குத்துகின்றன, குத்திய வலி பொறுக்க முடியாமல் துன்புற்று, பருந்தும் கழுகும் இறகுகளைப் பரப்பிக் கொண்டு சுழன்று சுழன்று ஆடுகின்றன. அதனைப் பாருங்கள்!

இருப்புக் கவந்தத்தின் மீது ஏறலும்
சூரர் எஃகம் புதைக்க இறகைப்
பரப்பிச் சுழன்று இங்கொர் பாறு ஆட,
ஈதுஓர் பருந்து ஆடல் காண்மின்களோ! 490

இருப்பு - இரும்பு. கவந்தம் - தலையற்ற உடல். சூரர் - வீரர். எஃகம் - வேல். புதைக்க - அழுந்த. பாறு - கழுகு.

படைத்தலைவர் கடனாற்றல்

வில்லையும் வாளையும் உடைய படைத் தலைவர்கள், போரில் எதிர்த்து வரும் பகைவர்படை தங்கள் படைமேல் வந்து அடைந்து அழிக்காமல் இருத்தற் பொருட்டு, தாங்களே முன்னின்று, தங்கள் வாழ்நாள் அழியும்படி, கொடிய வீரச் செயல்களைப் புரிந்து, செஞ்சோற்றுக் கடன் கழித்துப் பதில் உதவியை நிறைவேற்றுகிறார்கள். அவர்களின் தன்மையைப் பாருங்கள்!

வரும் சேனைதம் சேனை மேல்வந்து உறாமே, வில்
வாள்வீரர் வாணாள் உக,
கருஞ் சேவகம் செய்து செஞ்சோறு அறச்செய்த
கைம்மாறு காண்மின்களோ! 491

உறாமே - அடைந்து அழிக்காமல். வாணாள் - வாழ்நாள். உக - அழிய. கரும் சேவகம் - வல்லமை காட்டும் கொடிய போர்ச் செயல். செம்சோறு அறச் செய்து - வீரர்கள் அரசன் உணவை உண்பதால் அவனுக்கு வஞ்சகம் செய்யாமல், போரில் தங்கள் உயிரை அளித்துத் தமது கடமையை நிறைவேற்றல்; செம்மையாகிய சோற்றுக் கடனைக் கழித்தல் என்பது பொருள். அற - அழிய. கைம்மாறு - பதில் உதவி.

எழுந்தாடும் வீரர் தலை

யானைமேல் இருந்து போர் புரியும் வீரர் ஒருவரை ஒருவர் எதிர்த்தபோது அவர்களுடைய உடம்பினின்று வெட்டுண்ட தலைகள் மேலே கிளம்பித் துள்ளிக் குதித்துக் கீழே விழுகின்றன. இவ்வாறு துள்ளி விழும் தலைகள், பெருமையுடைய வீரமகள் அம்மானை ஆட்டத்தில் மேலே எறிந்து விளையாடும் விளையாட்டுக் கருவிகளை ஒத்திருக்கின்றன, பாருங்கள்!

யானைப் படைச் சூரர் நேர் ஆன போழ்து,
அற்று எறிந்து ஆடுகின்றார் தலை
மானச் சயப்பாவை விட்டு ஆடும் அம்மானை
வட்டு ஒத்தல் காண்மின்களோ! 492

சூரர் - வீரர். சூரர் நேர் ஆன போழ்து - ஒருவரை ஒருவர் நேருக்கு நேராக நின்று எதிர்த்துப் போர் புரியும் போது.

அற்று - நீங்கி. ஆடுதல் - குதித்தாடுதல். மானம் - பெருமை. சயப்பாவை - வீரமகள்; கொற்றவை. அம்மானை - பெண்கள் விளையாடும் ஒருவகை விளையாட்டு

வானில் கண்ட காட்சி

தேவர்கள் விமானங்களில் வந்து வீரர்களை எதிர் கொண்டழைக்க, வீரர்கள் அவற்றில் ஏறிச் சென்றதும், அப்படிச் சென்ற வீரர்களை இவ்வளவு பேர்தாம் என்று சொல்ல முடியவில்லை. அவ்வளவு வீரர்கள் சுவர்க்கம் சென்றனர். அதனால், இந்தக் கலிங்கத்துப் போர்க்களத்தி விருப்பதைக் காட்டிலும் மிகப்பெரிதாகிய ஒப்பற்ற வீரர் களின் கூட்டம், ஒளியுடைய தேவலோகத்திலும் தோன்றி யுள்ளது, பாருங்கள்!

எதிர் கொளும் சுரர் விமானங்களில் சுரர்களாய்
ஏறு மானவர்கள்தாம் எண்ணுதற்கு அருமையின்,
கதிர் விசும்பு அதனிலே இதனிலும் பெரியதோர்
காளையம் விளையுமா காண்மினோ! 493

சுரர் - தேவர். மானவர்கள் - வீரபுருடர்கள். கதிர் - ஒளி. காளையம் - வீரர் அவை. விளையும் ஆ(று) - தோன்றும் வகை.

குருதிக் கடல்

போர் புரியும் கலிங்க வீரர்களின் உடம்பினின்றும் பெருகிய குருதியாகிய கடலில், யானைகள் பொழிந்த மதநீர், கடற் கால்வாய்களைப் போலப் புகுந்து கலக்கவும்; குதிரைகளாகிய அலைகள் வீசவும், சவரி என்னும் சாமரமா கிய வெள்ளிய நுரைகள் வரிசையாக மிதக்கவும், அக் குருதிக்கடல் எங்கும் பரவியோடுகின்றதனைப் பாருங்கள்!

அவர் இபம் சொரி கதம்கழி எனப் புக மடுத்து
அவர் பரித்திரை அலைத்து, அமர் செய் கலிங்கர்தம்
கவரி வெண்நுரை நிரைத்து, அவர் உடல் குருதியின்
கடல் பரந்து ஓடுமா காண்மினோ, காண்மினோ!
494

அவர் - கலிங்கர். இபம் - யானை, சொரி - பொழிந்த. கழி- கால்வாய். மடுத்து -கலந்து. பரி - குதிரை. திரை - அலை. அமர்-

போர். கவரி - சாமரம். அவர் - கலிங்கர். ஓடும் ஆ(று) -ஓடும் தன்மை.

யானைகள் மலைகளை ஒத்தல்

உலகிலுள்ளவர்களைக் காத்து அருள் புரியும் குலோத்துங்க சோழன், முன்னொரு காலத்து - இராமனாக அவதரித்தபோது - பெரிய கடல்மீது அணை அமைக்க, அவனுடைய ஒப்பில்லாத வில்லை வளைத்தான். அப்போது குரங்குக் கூட்டங்கள் அக் கடலினிடத்தே பெரியபெரிய மலைகளைக் குவித்தன. அப்படிக் குவித்த மலைக்கூட்டத் தைப்போல் கரிய யானைகளின் பிணங்கள் இரத்தக் கடலில் குவிந்து கிடக்கின்றன. அதனைப் பாருங்கள்!

புவிபுரந்து அருள் செயும் சயதரன், ஒரு முறைப்
புணரிமேல் அணைபடப் பொருவில்வில் குனிதலின்
கவிகுலம் கடலிடைச் சொரி பெருங்கிரி எனக்
கரிகளின் பிணம்இதில் காண்மினோ,காண்மினோ!
495

புவி - உலகு. புரந்து - காத்து. சயதரன் - குலோத்துங்கன். ஒரு முறை - இராமனாய்ப் பிறந்தபோது. புணரி - கடல். பட - உண்டாக ; அமைக்க. பொருவு இல் - ஒப்பில்லாத. குனிதலில்- வளைதலினால். கவி - குரங்கு. கிரி - மலை.

வீரர் வியத்தல்

கருணாகரன் போர்க்களத்தில் விட்ட அம்புகள், கலிங்க வீரர்களுடைய கேடகத்தையும் கவசத்தையும் ஊடுருவிச் சென்று, அவர்களுடைய அகன்ற மார்பினையும் துளைத்துச் சென்றன. அதனால் கலிங்க வீரர், 'கருணாகரன் வில்வித்தை கற்ற திறந்தான் என்னே என்னே!' என்று புகழ்ந்து களத்தில் வீழ்கின்றனர். மேலும், தமது படைவீரர்களைப் 'போருக்குச் செல்ல வேண்டாம்' என்று தங்கள் கையாலேயே நிறுத்திக் கேட்டுக் கொள்கின்றனர். இதனையும் காணுங்கள்!

உற்ற வாய் அம்பி, தம் பரிசையும் கருவியும்
உருவி மார்பு அகலமும் உருவி, வீழ்செருநர் 'வில

கற்றவா, ஒருவன் வில் கற்றவா!'என்று தம்
கைம் மறித்தவரையும் காண்மினோ, காண்மினோ! 496

உற்ற -பொருந்திய. பரிசை - கேடகம். கருவி - கவசம். செறுநர் - வீரர். ஒருவன் - கருணாகரன். கற்று ஆ(று) - கற்ற தன்மை. மறித்தல் - விலக்குதல்.

வீரர்தம் உடலங்கள் தேவர்களை ஒத்தல்

போர்க்களத்தை நெருங்கி மேலே எழுந்து செல்கின்ற தேவர்களுடைய வானூர்திகளில், தேவர்களாகி விண்ணுலகத் துக்கு இப்போது போகும் வீரர்களுடைய உயிர்கள் மட்டு மல்லாமல், அவர்களின் உடம்புகளும் முகமலர்ச்சி கொண்டு கண்களை இமைக்காது இருந்ததால், அவையும் தேவர்களை ஒத்திருக்கின்றன பாருங்கள்!

விண்ணின் மொய்த்து எழு விமானங்களில் சுரர்களாய்
மீதுபோம் உயிர்களே அன்றியே, இன்றுதம்
கண்இமைப்பு ஒழியவே முக மலர்ந்து, உடல்களும்
கடவுளோர் போலுமா காண்மினோ! காண்மினோ! 497

விண் - வானம். மொய்த்து - நெருங்கி. சுரர் - தேவர். உயிர் - வீரர்தம் உயிர். இன்று - இப்போது. இமைத்தல் - மூடுதல். ஒழிய - தவிர. உடல் - வீரர்தம் உடல். கடவுளோர் - தேவர்.

வெட்டுண்ட யானைத்தலைகள் சம்மட்டியை ஒத்தல்

மூன்றாம் பிறைச் சந்திரனைப் போன்ற பெரிய தந்தங் களையுடைய, போரில் இறந்துபட்ட யானைகளினுடைய தலையாகிய முதற்பகுதியும், உடலாகிய பிற்பகுதியும் வெட்டப் பட்டு, நிலத்தில் வீழ்ந்து கிடக்கும், குறைந்த தலைகளாகிய துண்டுகள், கொல்லன் உலையில் இரும்புக் கருவிகளை அடிக்கும் சம்மட்டிகளை ஒத்திருக்கின்றன. பாருங்கள்!

விறைப் பெரும் பணை வேழம் முன்னொடு
பின் துணிந்து தரைப்படும்

குறைத்தலைத் துணி கொல்லன் எஃகு எறி
கூடம் ஒத்தமை காண்மினோ! 498

பணை - கொம்பு; தந்தம். வேழம் - யானை. துணிந்து - வெட்டுண்டு. தரை - நிலம். படும் - விழ்ந்து கிடக்கும். துணி - துணிக்கப்பட்ட பகுதி; துண்டிக்கப்பட்ட பகுதி; துண்டுகள். எஃகு - போர் கருவி. எறி - அடிக்கும். கூடம் - சம்மட்டி.

வேல் பறித்துச் சாயும் வீரர்

தங்கள் வாயில் புகுந்த வேல்களைப் பறித்தெடுப்பதற் காக, அவற்றை வலக்கையால் பிடித்தவண்ணம் களத்தில் சாய்ந்து கிடக்கும் வீரர்கள், ஊதுகொம்பை ஊதுகின்றவர் களை ஒத்திருக்கிறார்கள், பாருங்கள்!

வாயினில் புகு வேல்கள் பற்று
வலக் கையோடு நிலத்திடைச்
சாயும் மற்றவர் காளம் ஊதிகள்
தம்மை ஒத்தமை காண்மினோ! 499

பற்று - பிடித்து. காளம் - ஊதுகொம்பு. ஊதிகள்- ஊதுவோர்.

வீரர் படகோட்டிகளை ஒத்தல்

வீரர்கள் தம் மார்பிடத்து அழுந்தப் பாய்ந்த பெரிய வேல் களைப் பிடுங்கி, அதனை நிலத்தில் ஊன்றிக் குருதியாற்றில் தேர்மேல் நிற்கும் தன்மை, படகோட்டிகள் படகுகளின் மேல் நின்று துடுப்புகளால் ஊன்றி வலித்து ஆற்றில் செல்லுதலை ஒத்திருக்கின்றது, பாருங்கள்!

பட ஊன்று நெடுங் குந்தம் மார்பினின்றும்
பறித்து, அதனை நிலத்தூன்றித் தேர்மேல் நிற்பார்
படவு ஊன்றி விடும் தொழிலோர் என்ன, முன்னம்
பசுங்குருதி நீர்த் தோன்றும் பரிசு காண்மின்! 500

பட - அழுந்த. குந்தம் - வேல். பறித்து - பிடுங்கி. படவு - படகு. முன்னம் - வீரர்க்கு முன்னால். பசும் குருதி - பச்சை இரத்தம்.

நிணமென அம்பு பற்றிய பருந்தின் நிலை

கொழுப்பால் மூடப்பெற்ற கூரிய அகன்ற ஓர் அம்பைக் களத்துள்ள இரத்த வெள்ளம் இழுத்துச் சென்றது. கூரிய நகங்களையுடைய பருந்து ஒன்று, அந்த அம்பைக் கொழுப்பு மூடிய அம்பென்று கருதாமல் கொழுப்பே எனக் கருதித், தனது கோணல் அலகால் கௌவிக்கொண்டு மேல்நோக்கிப் பறந்தது. இவ்வாறு அகன்ற ஆகாயத்தில் அது பறந்து செல்லும்போது அந்த அம்பு அதனுடைய வலிய வாயைப் பிளக்கச் செய்துவிட்டது. அந்த வேதனை தாங்காமல், அப் பருந்து நிலத்தில் வீழ்ந்து கிடக்கிறது. பாருங்கள்!

வாய்அகல் அம்பு அரத்தமொடு நிணம் கொண்டுஓட
மற்று அதனை, வள் உகிரின் பருந்து கோணல்
வாய்அகல்அம்பரத்தினிடைக் கௌவி, வலவாய்
வகிர்ப்பட்டு, நிலம்பட்ட வண்ணம் காண்மின்! 501

வாய் - கூரிய முனை. அரத்தம் - இரத்தம். நிணம் - கொழுப்பு. வாள் - கூரிய, உகிர் - நகம். 'வள்உகிர் வான் பருந்து, கொண்டல்' எனவும் பாடம். கோணல் - வளைந்த. வாய் - அலகு. அகல் - அகன்ற. அம்பரம் - வானம். வகிர்ப்பட்டு - நிணத்துள் ஒளிந்திருந்த அம்பால் பிளவுண்டு. நிலம் படுதல் - நிலத்து வீழ்தல். வண்ணம் - தன்மை.

பிணந்தின்ற பூதம் வரும் தோற்றம்

போர்க்களத்துக்கு வந்த பருத்த வயிற்றையுடைய பூதமானது, நால்வகைப் படைகளுக்கும் தலைவனாகிய ஒருவனது உடலை வயிறு நிரம்ப நன்றாகத் தின்றுவிட்டு, மேலும் இறந்துபட்ட பெருவாரியான குதிரைகளைத் தலையில் சுமந்துகொண்டு வருவது, நிறை கருவுடைய ஒப்பற்ற சிறப்போடு தோன்றும் மேகம் வருவதுபோல் இருக்கின்றது பாருங்கள்!

சாதுரங்கத் தலைவனைப் போர்க் களத்தில் வந்த
தழை வயிற்றுப் பூதம்தான் அருந்தி, மிக்க

சாதுரங்கம் தலைசுமந்து, சுமஞ்சூல் கொண்டு
தனிப்படும் கார் எனவரும்; அத்தன்மை காண்மின்
502

சாதுரங்கம் - நால்வகைப் படை. தழை - பருத்த அருந்தி- உண்டு. சாதுரங்கம் - சிறந்த குதிரைகள். சுமம் - நிறைந்த சூல் - கரு. தனிப்படும் - ஒப்பற்ற தன்மை பொருந்திய. கார் - மேகம்.

விழுப்புண்பட்ட யானை வீரர்

'பெரிய மலைகள் இப்படித்தான் இருக்கும்' என்று கண்டோர் வியந்து சொல்லும்படி நிற்கும். போர் புரியும் யானைகளையுடைய வீரர்கள், ஒருவரை ஒருவர் வெல்ல முந்தும் போர்க்களத்தில், 'தங்கள் முதுகில் காயம் உண்டாகுமோ?' என்ற பழிக்குப் பயந்து, முன்புறமாகிய மார்பில் காயமடைந்து விழ்ந்து கிடக்கிறார்கள். பாருங்கள்!

'முது குவடு இப்படி இருக்கும்' என்ன நிற்கும்
முனைக் களிற்றோர்,செருக்களத்து, முந்து 'தங்கள்
முதுகு வடுப்படும்! என்ற வடுவை அஞ்சி
முன்னம் வடுப் பட்டாரை, இன்னம் காண்மின்! 503

முது - பெரிய. குவடு - மலை. களிறு - யானை. செருக்களம் - போர்க்களம். வடு - காயம். வடுவை - பழியை. முன்னம் - முன்னால் இருக்கும் மார்பு.

வாழ்விலே மட்டும் வீரர்களின் போர்மறம் பளிச்சிடவில்லை ; அவர் எதிர்ப்படை மறவரோடு மோதிப் போரிடும் போதிலும், அப்படிப் போரிட்டுக் களத்திலே மடிந்து கிடக்கும் நிலையிலும்கூட, அவர்களுடைய மறமாண்பு பளிச்சிடுகின்றது! இந்தச் சிறந்த தியாகத்தையும் வீரச் செறிவையும் படம் பிடித்துக் காட்டும் சிறந்த பகுதி இது. தம் நாட்டிற்காகச் சாவதில் இன்பம் காணும் நாட்டுப் பற்றினையும் இதிற் காணலாம்.

♦□♦